726

குண்டூசி

பிப்ரவரி ... எட்டு அணா



விரைவில் வெளிவரும்!

கே. ஜி. புரொடக்ஷன்ஸின்

இது நிஜமா

நவீன சமூகப்படம்.....

பாலசந்தர்... சீதாராமன்... சரோஜினி... குமாரிராஜம் நடித்தது

டைரெக்ஷன்... கிருஷ்ணகோபால்... ஸ்டுடியோ... ரஞ்சித்

கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R. S. மணி
பி. யு. சின்னப்பா
டி. பாலசுப்ரமண்யம்
கே. ஆர். ராமசாமி
ஸி. எஸ். ஜெயராமன்
என். எஸ். கிருஷ்ணன்
புளிமூட்டை
டி. ஆர். ராஜகுமாரி
எஸ். பி. எல. தனலக்ஷ்மி
பி. ஏ. பெரியநாயகி
ஏ. ஆர். சகுந்தலா
டி. ஏ. மதுரம்
ஸி. டி. ராஜகாந்தம்
ஸ்டுடியோ: நியூடோன்
கிருஷ்ணா பிக்சர்ஸ்
சென்னை. 17.



பாபுஜி

2-10-1869—30-1-1948

ஸௌரபி
பிக்சர்ஸின்
உன்னத
கன்னடப்
படம்

ஹொன்னப்ப
பாகவதர்
லக்ஷ்மிபாய்
நடிக்கும்

பக்த கும்பரா

—: மற்றும் :—

ராகவேந்திர ராவ்	லக்ஷ்மம்மா
முராராச்சார்	ஜெயஸ்ரீ
ஸீதாராம சாஸ்திரி	பண்டரி பாய்
மஹாபல ராவ்	ராமா பாய்

சென்னை-600 008

டைரக்ஷன்:
பொம்மன் டி. இரானி

சங்கீதம் :	ஸ்டுடியோ :	பாட்டுகள் :
ஸி. எச். பாகவதர்	பிரகதி	கே. ஆர். எஸ். சாஸ்திரி

விவரங்களுக்கு

ஸௌரபி பிக்சர்ஸ்,

தேவி பில்டிங்ஸ் :: அடையார் :: சென்னை.

ஸ்வர்ண ரிலீஸ்

மதுரையில்
நாகரீக ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்

நீல மாளிகை

கே. எஸ். பெருமாள் முதலியார்
& சன்

3/4, தெற்கு சித்திரை வீதி, மதுரை.

இந்த ஊசியில்

மஹாத்மா காந்தி 5

உள்ளது உள்ளபடி
—"ஜடாயு" 6

பாகவதரின் மூன்று
வருஷத் திட்டம் 9

ஷூட்டிங் நடக்கிறது.
—சித்திரம் 11

யோக மங்களம்
—மூவர்ணப் படம் 14

யோகம்—மங்களம்
வாழ்க்கை வர்ணனை 15

குண்டுசியைக் கேளுங்கள்... 23

செய்திப் படங்கள் 31

நுனிப் புல் —"வெட்டுக்கிளி" 39

கனவில் கண்ட கன்னிகை
—எஸ். கிருஷ்ணமூர்த்தி 42

பொதுஜனம் பேசுகிறார் ... 44

மேனாட்டு தியேட்டர்கள்
—கே. எஸ். குமார் 47

இது செய்தி 52

புஷ்பவல்லி, ரமண ராவ்
—மூவர்ணப் படம் 55

தமாஷ் சித்திரம் 60

ஜம்பம் —படவிமர்சனம் 61

தேவதாஸி —படவிமர்சனம் 63

புஸ்தக விமர்சனம் ... 65

பிரம்மலோகம் 67

குண்டுசி டைரி 68

அட்டைப் படம்:
"இது நிஜமா!" தமிழ்ப் படத்தில்
பாலசந்தர், சரோஜினி

ஜெய் ஹிந்த்
வந்தே மாதரம்

பாரத மக்களே!

களைப்பைப் போக்குவது பாரத் பானங்களே!
உணர்ச்சி, உண்டாக்குவதும் பாரத் பானங்களே
உத்ஸாகம் ஊட்டுவதும் பாரத் பானங்களேதான்

பாரத மக்களுக்கு பாரத் பானங்கள் மட்டும்தான் பரம திருப்தியைக் கொடுப்பது. பதினைந்து வருஷ அநுபவஸ்தர்களின் அரிய தயாரிப்புகள்

பாரத் பானங்களாகிய ஸோடா, கோலா, சாம்பைன், ஆரஞ்சு, லெம்ஜூஸ், ஸ்பெஷல் எல்லாம் கிடைக்கும்.

பாரத் சோடா கம்பெனி

34, சம்பந்தமூர்த்தி தெரு, :: மதுரை.

"கண்ணன் கீதை"

இதைப் படித்துத்தான் மஹாத்மா காந்தி, திலகர், சுவாமி விவேகானந்தர் சுபாஷ் பாபு, பாரதியார், ராஜாஜி முதலியோர் ஆன்ம அறிவு பெற்று சிறப்புற்றார்கள்.

அவர்கள் தானு! நாம் ஏன் படிக்கக் கூடாது? அதற்காகவே மிக சிறிய அளவில், எளிய தமிழ் வசனத்தில் 96 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

விலை அணா 4-தான்

தனி புஸ்தகம் 5 அணா ஸ்டாம்பு அனுப்பி பெறலாம். வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன் உண்டு. எழுதி அறியலாம்.

இன்ப நிலயம்,
43, பாளையப்பன் தெரு, - ஏழு கிணறு, சென்னை 1.

பட்டை 1
ஊசி 5

குண்டூசி

பிப்ரவரி
1948

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

மஹாத்மா காந்தி

இந்தியா தன் பிதாவை இழந்து விட்டது. இந்தியர்கள், கத்தியின்றி இரத்தமின்றி சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த அஹிம்ஸா வீரத் தலைவரை இழந்துவிட்டனர். உலகமோ தெய்வாம்சம் பொருந்திய ஒரு மானிடனை இழந்து விட்டது. மஹாத்மா காந்தி அமரத்வம் அடைந்து விட்டார்.

காந்திஜியைப்பற்றி என்ன எழுதுவது என்று எமக்குத் தோன்றவேயில்லை. ஏனெனில், உலகம் பூராவிலும் உள்ள பத்திரிகைகள், பிரமுகர்கள், தலைவர்கள், மதாச்சாரியர்கள் முதலிய அநேகரும் காந்திஜியைக் கடவுளின் அவதாரமென மதித்து தங்கள் வருத்தத்தைப் பலவாறாக வர்ணித்திருக்கின்றனர். நாம் ஒரு சில வார்த்தைகள் எழுதுவதற்குக் கூட அவர்கள் எதையும் பாக்கியாக வைக்கவில்லை.

இந்தியாவுக்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்ததன் மூலம் அஹிம்ஸையின் மஹத்தான சக்தியை அவர் நமக்கு நிதர்சனமாகக் காட்டினார். அதே போல ஹிம்ஸை எல்லை மீறிவிட்டால் அதன் மூலம் எத்தகைய மஹத்தான தீமை ஏற்படக்கூடும் என்பதற்கு உதாரணம் போல அவரே உயிர்த்தியாகம் செய்ய வேண்டியதாகி விட்டது நம் துர்பாக்கியமாகும். இதனால் எமக்கேற்பட்டிருக்கும் துக்கத்தைப் பேனா கொண்டு விவரித்து விடுவது கொஞ்சமும் சாத்தியமேயில்லை.

காந்திஜி பூத உடலை நீத்து அமரத்வம் அடைந்தது சமீபத்தில்தான். ஆனால் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே அவர் இந்திய மக்களின் உள்ளக் கோயிலில் குடியிருந்து வருகிறார். அவரை ஒரு தெய்வமாகவே மதித்து அவரது படத்திற்கு பூஜைகள் செய்வதை நாம் தினசரி பார்க்கிறோம்.

காந்திஜி இறந்து விட்டார் எனச் சொல்வது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. அவரும் சரி; அவரது அஹிம்ஸாக் கொள்கையும் சரி, உலகம் உள்ளளவும் சிரஞ்சீவியாகவே இருக்கும். முன்பாவது காந்திஜி ஆயிரம் மைல்களுக்கப்பாலிருந்ததான எண்ணம் ஏற்பட்டது. ஆனால் இப்பொழுதோ எங்கு திரும்பினாலும்—ஏன்?—நம் உள்ளத்திலேயே வசிப்பதாகவும், சதா நம்மோடு பேசுவதாகவும் தோன்றுகிறது. சர்வ வியாபியாகிவிட்ட அவருக்கு மரணம் ஏது?

இனி காந்திஜியின் மரணத்திற்கு வருந்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவரிடம் உண்மையான பக்தியுடையவர்களெல்லாம் அவரது லஷியங்களை எழுத்துக்கு எழுத்து பின்பற்றி நடப்பார்கள்; உலகம் பூராவிலும் அந்த லக்ஷியத்தைப் பரப்புவார்கள். காந்திஜியின் லக்ஷியங்கள் அந்தகாரம் சூழ்ந்த உலகிற்கு அரும்பெரும் ஜோதியாய் விளங்கும்.

உள்ளது உள்ளபடி

ஜடாயு

புகை மண்டலம்

ஆயிரக் கணக்கானவர்கள் ஒரு கட்டிடத்திற்குள் அடைபட்டுக் கொண்டு சினிமாப் பார்ப்பதே சுகாதாரக் கெடுதலாகும். இக்கெடுதலைக் கூடியவரையில் குறைப்பதற்காகவே "எக்ஸாஸ்ட் பான்ஸ்", சீதோஷ்ணமாறுதல் வசதிகள் ஆகியவை தியேட்டர்களில் அமைக்கப் படுகின்றன. ஆனால் இவைகளெல்லாமிருந்தென்ன? புகை பிடிப்பவர்கள் தான் படம் ஆரம்பம் ஆவதற்கு முன்பே தியேட்டருக்குள் புகையை நிரப்பிவிடுகிறார்களே. இந்தப் புகை மூலம் பார்க்கும்போது படமே மங்கலாய்த் தெரிகிறதல்லவா? மூன்று மணி நேரம் புகையும் புழுக்கமும் நிறைந்த சூழ்நிலையில் இருந்தால் தேகாரோக்கியம் கெடாமலா இருக்கும்? ஒரு சிலருக்கு சிகரெட் புகை குமட்டலை உண்டுபண்ணுவதாயிருக்கும். இருந்தாலென்ன? அவர்கள் சினிமா படம் பார்க்க ஆசை கொண்டால் சிகரெட் புகை நடுவில் இருக்க முதலில் பழகிக்கொண்டுதான் ஆக வேண்டும்.

சபாஷ் பம்பாய்!

இப்பெரும் சுகாதாரக் கெடுதியைப் பற்றி பட ரஸிகர்கள் பன்முறை பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு இதுவரை கதிமோக்ஷம் ஏற்படவில்லை. எனவே, பம்பாய் நகர சபையினர், "தியேட்டருக்குள் புகை பிடிப்பதைக் தடுக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதை அறிய மிக சந்தோஷம் ஏற்படுகிறது. இதற்காக அந்த நகர சபையினரை புகை பிடிக்கும் வழக்கமில்லாத பட ரஸிகர்கள் மனமார வாழ்த்துவார்கள் என்பது நிச்சயம்.

சென்னை பின்பற்றுமா ?

பஸ்களில் புகை பிடிக்கக்கூடாது என்ற விதி அமுல் செலுத்தப்படுகிறது. இதேபோல் தியேட்டருக்குள்ளும் புகை பிடிப்பதை ஏன் தடுக்கக்கூடாது? பம்பாய் நகரசபை நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தைச் சென்னை நகர சபையும் சென்னை சர்க்காரும் பின்பற்ற வேண்டும். அதோடுகூட சினிமாத் தியேட்டர்கள் சம்பந்தமான சட்டத்தில் புகை பிடித்தலைத் தடுக்கும் ஒரு விதியையும் சேர்க்க வேண்டும்.

குழப்ப நிலைமை

இப்பொழுது சினிமாத் தொழிலின் நிலைமை மிக மோசமாயிருக்கிறது. பணத்தின் மதிப்பு குறையத் தொடங்கியதும் படத் தொழிலே முதலில் பாதிக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாக நக்ஷத்திரங்கள் நடிக்கும் படமாயிருந்தால்கூட மண்ணைக் கவ்வுகின்றன. சாதாரண நடிகர்கள் நடிக்கும் சில படங்களோ வெற்றி பெறுகின்றன. இதன் காரணமாக பட ரஸிகர்கள் எதை விரும்புகிறார்கள்; எதை விரும்பவில்லை என்பது பட முதலாளிகளுக்குத் தெரியாமல் விழிக்கிறார்கள். படச் செலவோ இப்பொழுது லக்ஷக் கணக்கில் உயர்ந்து விட்டது. ஒருவரே படத்தின் செலவு பூராவையும் செய்து படத்தைத் தயாரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. அப்படியே தயாரித்து விட்டாலும் அதை வாங்குவதற்கு விநியோகஸ்தர்கள் கிடையாது.

ஆதலால் படத்தைத் தயாரித்தவர் தாமே படத்தை விநியோகிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படியே அவர் விநியோகிப்பதாக வைத்துக்கொண்டால், அடுத்தபடியாக ஏற்படும் கஷ்டம் தியேட்டர் கிடைக்காததாகும். படத்திற்கு வசூல் ஏற்படுகிறதோ இல்லையோ, தியேட்டர்காரர்கள் பாடு வேட்டையாயிருக்கிறது. தியேட்டர் வாடகையை ஒன்றுக்குப் பத்தாக வசூலித்துக்கொண்டு விடுகிறார்கள். இவ்வளவு சங்கடங்களையும் தாண்டிய பின்னரே பட முதலாளி போட்ட பணத்தை திரும்பக் கண்ணால் பார்க்க முடிகிறது. படம் நல்லதாக இருந்தால் பட முதலாளி பிழைத்துக் கொள்ளுவார். மோசமானதாக இருந்தாலோ அதோ கதிதான்.

வழி செய்ய வேண்டும்

நிரந்தரமாக உள்ள—அதிகப் படங்களை உடைய—விநியோகஸ்தர்களுக்கே தியேட்டர்காரர்கள் சலுகை காட்டுகிறார்கள். இந்த விநியோகஸ்தர்களின் ஒரு புதுப்படத்தைக் காட்டுவதற்கு முன்பு அவர்களுடைய பழைய படங்கள் எல்லாவற்றையும் காட்டும்படி வற்புறுத்துகின்றார்கள். இந்த நிலைமையில் தனிப்பட்ட பட முதலாளி-விநியோகஸ்தருக்கு எங்கே தியேட்டர் கிடைக்கும்? படத்தை முடித்தபின் அதை வெளியிடுவதற்கு தியேட்டர் கிடைக்கா விட்டால் பட முதலாளியின் கதி என்னவது?

இந்த மோசமான நிலைமையை உடனே மாற்றுவதற்கு பட முதலாளிகள், விநியோகஸ்தர்கள், தியேட்டர் காரர்கள் ஆகிய அனைவரும் ஒரு மஹாநாட்டைக் கூட்டி தங்களுக்குள் ஒரு கட்டுப் பாட்டை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சீர்கேடுகளை எல்லாம் விவாதித்து நிவர்த்திக்கவேண்டும். இந்த நெருக்கடியான நிலைமையில் அவர்கள் சுயநலத்துடன் இருந்து விட்டால் படத்தொழிலின் எதிர்காலம்

எங்கள் வியாபார ஸ்தலங்கள்

பெங்களூர், பனாரீஸ், காஞ்சீவரம்,
பெங்கால் பட்டுப் புடவைகளுக்கும் இன்னும்
எல்லாவித ஜவுளி தினுசுகளுக்கும் பெயர்
— போனவை —

கால நிலையை அனுசரித்தே விலை

P.R. நாராயணசாமி அய்யர்.

Branch :

Fancy Hall,

சைனா பஸார்,

திருச்சினாப்பள்ளி.

பட்டு நூல்
ஜவுளி வியாபாரம்

பெரிய கடை வீதி,

திருச்சினாப்பள்ளி.

எப்படி யிருக்கும் என்று சொல்ல முடியாது.

தலை வேதனை !

படத்தொழில் தற்காலம் ஒரு அபாய கரமான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இரவல் குரலுக்கும் ஒரு அளவு வேண்டாமா? சுயமான குரலில் பாடி, நடிப்பவர்களின் எண்ணிக்கை வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. நடிப்பு ஒருவர்; பாட்டு வேறொருவர் என்ற வழக்கம் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஏற்பட்டு விட்டது. ஒரு படத்தில் ஒரு நடிகைக்கு பாட்டிற்கு மட்டுமன்றி சம்பாஷணைகளுக்குக்கூட குரல் வாங்கப் பட்டிருக்கிறதாம். எதிர்காலத்தில் பாட்டோடுகூட சம்பாஷணையையும் இரவல் வாங்கும் வழக்கம் சர்வ சாதாரணமாகி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. படம் பார்ப்பவர்களுக்கு இந்த இரவல் வியாபாரம் பெரும் தலைவேதனையாயிருக்கிறது என்பது எங்கே படமுதலாளிகளுக்குத் தெரியப் போகிறது? குரல் இரவல் வாங்கும் வழக்கத்தை விட்டு விட்டு, இனி பட முதலாளிகள் பாட்டு, நாட்டியம், அழகு எல்லாம் ஒருங்கே பொருந்திய நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுப்பார்களாக.

நவகாளி யாத்திரை

வெள்ளி மணி.. ஆசிரியர் சாவி..... எழுதியது

மகாத்மாஜியின் நவகாளி யாத்திரையிலும், தமிழக யாத்திரையிலும் நேரில் கலந்து கொண்ட ஸ்ரீ சாவி அவர்கள் எழுதிய கட்டுரைத் தொகுதி. சுமார் எண்பது பக்கங்கள் கொண்டது. யாத்திரை சம்பந்தமான இரு வணப் படங்கள் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப் பெற்று அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கல்கி ஆசிரியர் முன்னுரையுடன்

விலை ரூபாய் 1-8-0

புதுமுறை வெளியீடு

கண்ணன்

புதுமுறை வெளியீடு, மாம்பலம், சென்னை. 17.

நமது விசேஷ நிரு...

Feb 1948

பாகவதரின் மூன்று வருஷத் திட்டம்

தற்சமயம் பூனாவில் வாசம் செய்து வரும் ஸ்ரீ. எம். கே. தியாகராஜ பாகவதரை நான் சில தினங்களுக்கு முன்னால் பூனாவுக்குச் சென்று பேட்டி கண்டேன். தமது சொந்தப் படமாகிய ராஜமுக்தியை வெகு ஜரூராகத் தயாரித்து வரும் ஸ்ரீ. பாகவதர் அவர்களைப் பற்றி நமது நேயர்களிடமிருந்து பலவிதமான, விசித்திரமான கேள்விகளும் விநோதமான சந்தேகங்களும் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன. அவைகளில் சில கேள்விகளைப் பாருங்கள் :



(1) பாகவதரின் தலை மொட்டையாய் இருப்பதாகக் கூறப்படுவது வாஸ்தவமா?

(2) பாகவதருக்கு தற்பொழுது சாரீரமே போய்விட்டதாக வதந்தி உலவுகிறதே? இது உண்மையா?

(3) பாகவதர் திருச்சி ரேடியோவில் சில மாதங்களுக்கு முன்னால் பாடிய போது அவ்வளவாகச் சோபிக்கவில்லையே. பாகவதரின் பழைய இனிய குரல் போய்விட்டதா?

(4) பாகவதர் தற்பொழுது பார... வைக்கு ரொம்ப இளைத்து, கருத்து இருப்பதாகச் சொல்லுகிறார்களே. இது மெய்தானா?

(5) பாகவத... தற்பொழு... கதர் கட்டுகிற... ரா? அல்லது பழைய மாதிரி ஒரே 'ஸில்க்' மயமாய் இருக்கி...றாரா?

(6) பாகவத... இப்போது எடு...து வரும், ரா...முக்தி பட... வெளி வரு...தற்கு, மாமூ... படி மூன் ... வருஷமாகுமா... ஏனென்றால் பா... கவதர் ப...டமெ... ...ரால் குறைந்த... இரண்டு வ... ஷங்கள் தா... 'வெகு சீக்கிர... என்று பெயர்...

(7) பாகவதரி... பூனா முகா... மூன்று வருஷ காலம் நீடிக்குமாமே? இதற்குக் காரணம் என்ன?

(8) பாகவதர் கூப்பிட்டால், எ... நடிக, நடிகைகளும் பூனா போ... தற்கோ அவருடன் நடிக்க ஒப்பந்...

சய்து கொள்ளுவதற்கோ பயப்படு ரர்களாமே? இம்மாதிரி புரளிப் சாரம் நடக்கிறதே; இது உண் மயா?

மேற்கண்ட வை விகளுக் ல்லாம் நா கவே பதில் சால்ல முடி ாதாகையால் ுவுக்கே நேரில் சென்று ாகவதரையும் வர் வாசம் சய்யும் இடம் டுடியோ முத யவற்றையும் நேரில் பார்த்துவிட்டு க்தேன்.

பானுமதி

முதலில் ாகவதரைப் பார்த்து, தாங்கள் தலையில் அணிந்திருக்கும் டாபா, நிஜக் கூந்தல் மாதிரியேயிருக் றதே'' என்று கேட்டு வைத்தேன். டனே பாகவதர். ''நீங்கள் சொல் புரிந்தது. முன்பு இருந்ததைவிட ர்த்தியாகவும், கொஞ்சம் நீண்டும் ார்ந்திருக்கிறது'' என்று கூறி து கூந்தலை ஒரு உலுக்கு உலுக் காண்பித்தார். பாகவதருடைய ந்தல் முன்னைவிட மிகவும் அழகா சுருண்டு வளர்ந்து சுருகறு ன்று காணப்பட்டது.

அடுத்தப்படியாக, சாரீரத்தைப் றிப் பிரஸ்தாபித்தேன். அவர் பேசி லிருந்து வந்த தொனியே என் சந் கத்தை நிவர்த்தி செய்துவிட்டது. றல் அவர் விடவில்லை. தற்பொழுது ம் தயாரித்து வரும் படத்தில் இது ர ஐந்துபாட்டுக்கள் பதிவாகியிருப் ாயும், ஹரிதாஸ் படத்தில் தாம் டியிருப்பதை விடப் பிரமாதமா ருப்பதாகவும், தமக்கே திருப்தி ரிக்கும் முறையில் பாடியிருப்ப கவும் தெரிவித்தார்.

றகு அவர் திரிச்சி ரேடியோ சேரி விஷயமாய் நேயர்களின் க்குத் தந்த பதிலும் ஒப்

புக் கொள்ள வேண்டியதே. திருச்சி ரேடியோக் கச்சேரிக்கு முன் ஒரு வாரமாகவே பாகவதருக்கு ஜலதோ ஷம் காரணமாகத் தொண்டை சரி யாயில்லாததுடன் காது 'குத் தலும் சேர்ந்து அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாராம். வேறு யாரை யாவது அன்று பதிலுக்குப் பாடும்படி பாகவதர் கேட்டுக் கொண்டும், திரிச்சி ரேடியோ நிலையத்தார் விடாப் பிடியாக அழைத்துக் கொண்டு போய் விட்டார்களாம். எனவே பாக வதருக்கு இஷ்டமில்லா மலேயே அன்று ரேடியோக் கச்சேரி முடிந்தது. அப்படி யிருக்கும்போது நேயர் களுக்கு மட்டும் எப்படித் திருப்தி அளித்திருக்க முடியும்?

பாகவதரை நான் 1944-ம் வரு ஷத்தில் பார்த்த பொழுது, சரீரம் வெகுவாய்ப் பருத்து இருந்தது. தற் பொழுதோ, வயதில் பதினைந்து வரு ஷம் குறைந்த யௌவன புருஷராய் விளங்குகிறார். இதை நான் அவரிட மும் சொல்லி வைத்தேன். பாகவதர் தம்மைத் தாமே ஓரிரண்டு தடவை பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண் டார்!

பாகவதர் தம்முடைய வாழ்க் கைத் துறையில் ஏற்பட்ட கரடு முர டான பாதையைத் தாண்டி, பழைய ஸாயான ஸில்க் ஆடையை உதறித் தள்ளி, தூய வெண்மையான புனிதக் கதர் ஆடையைத் தான் அணிந்தி ருக்கிறார். அதே போல் அவரு டைய மனமும் வாழ்க்கையும் கூட இப்போது தூய்மை அடைந் திருப்பதற் கான அறிகுறிகளைக் கண்டேன்.

வி. என். ஜானகி

பாகவதர், தற்பொழுது எடுத்து வரும் ராஜமுக்தி ...

ருக்கு பல லக்ஷ ரூபாய்களுக்கு விற்று விட்டார். ஆகவே படமும், வெகு மும்முரமாய் சுடப்பட்டு வருகிறது. (சுடுவதில்தான் பூனா வாசிகள் உலகப் பிரசித்தி பெற்று விட்டார்களே! அப்படியிருக்கும்பொழுது ராஜமுக்தி படத்தைச் சீக்கிரமாய்ச் சுடுவதுதானா ஒரு பிரமாதம்?) எப்படியும் மே மாஸத்திற்குள் திரைக்குத் தயாராகி விடலாம் என்று தைரியமாய்ச் சொல்லுகிறார்கள்.

ஒரு மனிதன் செல்வ நிலையில் இருக்கும்பொழுது பல சிநேகிதர்கள் அந்த மனிதனைச் சுற்றுவது உலக இயற்கை. அதே மனிதனுக்கு கிரஹம் மாறி, சிரம தசை ஏற்பட்டு, அதுவும் காராக்ரகப் பிரவேசமும் சம்பவித்தால், பணத்தையே குறியாகக் கொண்டவர்கள் கிட்ட நெருங்கிப் பேசவும்மாட்டார்கள்; கூப்பிட்டாலும் பார்க்காமலே போய் விடுவார்கள். இம்மாதிரி அநுபவம் காரணமாகத்தான் பாகவதர் சென்னை பக்கமே திரும்பாமல் பூனாவுக்குச் சென்றிருக்க வேண்டும்.

பாகவதருடைய பூனா வாசம் மூன்று வருஷத்திற்கு நீடிக்கும் என்று தெரிகிறது. அதற்குள் அங்கே மூன்று படங்களை எடுத்து முடிப்பதற்குத் திட்டம் போட்டு, மும்முரமான ஏற்பாடுகளுடன் இருந்து வருகிறார். அதில் ஒரு படம் கட்டாயம் ஹிந்திப் படமாக இருக்குமாம். பாகவதருடன், துர்கா பாய் கோட்டே, சூரையா முதலியவர்கள் நடிப்பார்கள் என்று தெரிகிறது.

பாகவதரது படத்தில் நடிப்பதாய் விளம்பரப் படுத்தப்பட்டிருக்கும், பிரதான நடிகர்களில் சிலரையும் தனித் தனியாய்ச் சந்தித்துப் பேசினேன். ஸ்ரீமதி வி. என். ஜானகி, ராஜகாந்தம், வீரப்பா, ரங்கராஜன், சஹாதேவன் இவர்களும் அங்கே இருந்தார்கள். பூனாவில் நரேந்திரா பிச்சர்ஸ் இருக்கும் இடம் சிவாஜி நகரில், மூன்று அடுக்குள்ள புதிய மாடிக் கட்டிடம். இரண்டாவது மாடி சுமார் இருபத்தெட்டு அறைகள் கொண்டதாயிருக்கிறது. மேற்படி இரண்டாவது மாடி பூராவையும் அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள். பாகவதர் தம் குடும்பத்துடன் அதே மாடியில்தான் வசிக்கிறார். ஒவ்வொரு நடிகர், நடிகைக்கும் தனித் தனியே அறைகள். "நரேந்திரா ஹோட்டல்" என்று கூட முதலில் நினைக்கும்படி இருந்தது. வேளா வேளையில் சாப்பாடு, காப்பி, பலகாரம் சகல வசதிகளும் பிரமாதமாய் இருந்து வருகிறது. புரொடக்ஷன் மானேஜர் ஸ்ரீ. கோபால் ராவ் என்பவர் பாகவதருக்கு உதவியாய் நிர்வாக சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் கவனித்து வருகிறார். ஒவ்வொரு காரியங்களையும் பாகவதர் தாமே நேரில் பார்த்துக் கவனித்து வருகிறார்.

நரேந்திரா பிக்சர்ஸ் அமர்ந்திருக்கும் இடத்தையும் அங்கு இருக்கும் வசதிகளையும் பார்த்த பொழுது எனக்குக்கூட பாகவதர் படத்தில் நடிக்கலாமா என்று தோன்றி விட்டது! ஆனால் சினிமா ரஸிகர்கள் எனக்கு யாதொரு தீங்கும் செய்ய வில்லை யாகையால் அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்" என்பார்களே, அம்மாதிரி, பாகவதர் ஜாகையில் நான்கு மணிநேரம் தங்கியதன் பலனாக திருப்பி வரும்பொழுது, "அப்பனைப் பாடும் வாயால்" என்று பாடிக்கொண்டே நான் ஊருக்குப் புறப்பட்டு வந்தேன்.

"கங்கணம்"

தமிழ்ப் படத்தில்

மேனகா



ஷூட்டிங் நடக்கிறது

நடன சகோதரிகள்

யோகம் மங்களம்

வாழ்க்கை வர்ணனை

சுமார் பத்து வருஷங்களுக்கு முன் ஒரு நாள், டைரெக்டர் துவாரகநாத் கும்பகோணத்திலுள்ள மார்னிங் ஸ்டார் பெண் பாடசாலைக் கருகில் தம் மோட்டாரை நிறுத்திக் கொண்டு, பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும் சிறுமிகளை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அவரது செய்கை, வலையை வீசி விட்டு அதில் ஏதேனும் பறவை வந்து விழாதா என்று காத்துக் கொண்டிருக்கும் வேடனை நினை வூட்டியது. அவரது கண்களோ அந்தச் சிறுமிகள் கூட்டத்தில் யாரையோ தேடி அலைந்து கொண்டிருந்தன. சிறுமிகள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக கலைந்து போயிற்று. கடைசியில் இரண்டு சிறுமிகள் மட்டும் சேர்ந்தாற்போல் கொம்மாளமாய் பேசிக் கொண்டே போவதை துவாரகநாத் பார்த்தார். உடனே அவர், "டிரைவர், டிரைவர்! மோட்டாரை மெதுவாக ஓட்டிக் கொண்டு போ! அதோ அந்தப் பெண்கள் பின்னால்!" என்று பரபரப்புடன் கூறினார். மோட்டார் அவர்களைப் பின் தொடர்ந்தது. தங்கள் வீடு வந்ததும் அச்சிறுமிகள் உள்ளே சென்றனர். துவாரகநாத்தும் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

வெகு நேரத்திற்குப் பின் துவாரகநாத் சந்தோஷ முகத்துடன் வெளியே வந்தார். போன காரியத்தில் அவருக்கு ஜெயம் என்பதை அவரது முகத்தில் தவழ்ந்த லேசான புன்னகை ஊர்ஜிதம் செய்தது. ஆம்; அந்தப் பெண்களில் வயதில் குறைந்தவளான (ஆறு வயதுடைய) தங்கத்தை துவாரகநாத் தம் படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டார்.

குண்டூசி

" அதெல்லாம் சரிதான்; யோகம் மங்களம் இவர்களைப் பற்றி எழுத ஆரம்பித்து விட்டு யாரோ ஒரு தங்கத்தைப் பற்றி வர்ணித்துக் கொண்டு போகிறீரே?" என்று நீங்கள் கேட்கிறீர்களா. அதைத் தான் நானும் சொல்ல வந்தேன். அந்தத் தங்கத்தால்தான் இப்பொழுது யோகம் மங்களத்தின் வீட்டில் தங்கம் நிரம்பிக் கொண்டிருக்கிறது. யோகம் மங்களம் இவர்களது இளைய சகோதரியான அந்தத் தங்கம் முதலில் சினிமாவில் நடிக்க வந்ததின் விளைவாகவே இன்று யோகம்-மங்களம் நாட்டிய-நடிகைகளாக விளங்கி வருகின்றனர்.

யோகம் மங்களம் சகோதரிகள் தஞ்சை ஜில்லாவில் திருவையாறுக்குச் சமீபமுள்ள காருகுடி என்ற கிராமத்தில், செல்வமும் கௌரவமும் மிகுந்த ஒரு சைவபிராமண மிராசுதார் குடும்பத்தில்பிறந்தவர்களாவர். இவர்களுடைய தாயாரான மீனாக்ஷி அம்மாள் சங்கீத பரம்பரையில் பிறந்தவர். அவருடைய பாட்டனாரான கொத்தவாசல் வெங்கடராமய்யர் ஒரு பெரிய சங்கீத வித்வானாக விளங்கி வந்தார். அவர் சில வர்ணங்களையும் இயற்றி யிருக்கிறாராம். மீனாக்ஷி அம்மாளின் சகோதரியின் மாமனார்தான் மஹா வித்வான் பட்டணம் சுப்ரமண்ய ஐயர். இப்பொழுது சங்கீதக் கச்சேரிகளில் பிரசித்தி பெற்று வரும் கும்பகோணம் சகோதரர்கள் (சங்கரன், விஸ்வநாதன்) மீனாஷி அம்மாளின் சொந்த சகோதரர்களாவர். மற்றும் யோகம் மங்களத்தின் நெருங்கிய சொந்தக்காரர்கள் பலர் இப்பொழுது சென்னையில் பெரிய பதவிகளில் இருந்து வருகின்றனர்.

யோகம், மங்களம், தங்கம் ஆகியோர் சிறு குழந்தைகளாக இருந்த போதே அவர்களுடைய தகப்பனுர் சுப்ரமண்ய ஐயர் காலமாகி விட்டார். அதன் பிறகு மீனுக்ஷி அம்மாள் தம் மூன்று பெண்களையும் அழைத்துக் கொண்டு கொத்தவாசலுக்குச் சென்று தம் தகப்பனுரின் வீட்டில் கொஞ்ச காலம் தங்கி யிருந்தார். பிறகு, தம் பெண்களைப் படிக்க வைப்பதற்காக அங்கிருந்து கும்பகோணத்திற்குச் சென்று தம் சகோதரியுடன் வசிக்கலானுர்.

துவாரகநாத் தாம் எடுத்துக் கொண்ட முயற்சியில் சுலபமாக வெற்றி பெற்று விடவில்லை. அவருடைய யோசனையைக் கேட்டதும் தங்கத்தின் தாயார் மீனுக்ஷி அம்மாள் முதலில "முடியவே முடியாது" என்று சொல்லி விட்டார். வீட்டிலிருந்த நெருங்கிய சொந்தக்காரர்களும் தங்கத்தைச் சினிமாவில் நடிக்க வைக்கும் யோசனையை அடியோடு வெறுத்தனர். ஆனுல் துவாரகநாத் விட்டால்தானே? உயர் குடும்ப ஆண் பெண்கள் சினிமாவில் நடிக்கலா மென்றும், மேலும் தங்கம் சிறு பெண்தானே என்றும அவர் வாதித்தார். அதன் விளைவாக மீனுக்ஷி அம்மாவின் மனம் மட்டும் மாறியது. பிறகு, சொந்தக்காரர்கள் எவ்வளவோ ஆட்சேபித்தும், தடை செய்தும் கேளாமல் அவர் தங்கத்தை சினிமாவில் நடிக்க அனுமதித்தார்.

துருதுருப்பு மிகுந்த தங்கம், துவாரகநாத (1938-ல்) தயாரித்த "பாக்ய தாரா" அல்லது "லக்கி ஸ்டார்" என்ற தமிழ்ப் படத்தில் நடித்து நல்ல புகழையும் பெற்ருள். அக குழந்தை எவ்வளவு புகழை அடைந்ததோ அதைப் போல் பன்மடங்கு இகழை அவளது தாயார் தாங்க வேண்டியிருநதது. உறவினர்களின் மனஸ்தாபமும், அவதூறும் வரவர அதிகரித்தது.

இதற்கு; அடுத்த வருஷத்தில் எஸ்.கே. வாசகம் நியூடோன் ஸ்டுடியோவில் தாம் தயாரித்து வந்த "சித்ரா" படத்திற்காக பேபி தங்கத்தை ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்தப் படத்தில் தான் ஜி. சுப்புலக்ஷ்மி முதன் முதலாக நடித்தார் என்பதும், இப் படம் ஓரளவு தயாராகி பின் முடிவடையாமலே நின்று விட்டதென்பதும் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்.

இந்தப் படத்திற்கு அகால மரணம் ஏற்பட்டது போலவே அதில் நடித்த பேபி தங்கத்திற்கும் அகால மரணம் ஏற்பட்டது. இந்தத் துக்கத்தில் மீனுக்ஷி அம்மாளும், யோகம்-மங்களமும் ஆழ்ந்திருந்த போது உறவினர்களின் உபத்

திரவம் தாங்க முடியாமற்போய் விட்டது. அவர்கள் கொடுத்த தொல்லை மீனாக்ஷி அம்மாளின் மனதை மேலும் உறுதிப் படுத்தியது. அவர்கள்மீது பழி வாங்கும் ரீதியில் தம் மற்ற இரு பெண்களையும்கூட சினிமாவில் நடிக்க வைப்பதென்ற தீர்மானத்துடன் மீனாக்ஷி அம்மாள் யோகம் மங்களம் இருவருடன் சென்னைக்கு வந்து (**1941** ல்) குடியேறினார். வந்ததும் வராததுமே உமா பிக்சர்ஸார் தயாரித்த "தமிழறியும் பெருமாள்" படம் யோகம்-மங்களம்சகோதரிகளுக்கு இடமளித்தது. இருவரும் அப்படத்தில் நடித்திருப்பதோடு நாட்டியமும் ஆடியிருக்கிறார்கள்.

இப்படம் வெளி வந்தவுடன் அவர்கள் பட ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்தனர். ஆனால் இது வெளி வருவதற்குள்ளேயே பட முதலாளிகளின கவனத்தைக் கவர்ந்து விட்டனர். அதன் காரணமாக ஏககாலத்தில் நான்கு படங்களில் நடிக்கும் பாக்கியத்தைப் பெற்றனர். "நவீன விக்கிரமாதித்தனி"ல் இருவரும் நடித்திருக்கின்றனர். ஆனால் "கண்ணகி"யிலோ யோகம் மட்டும் இடைச்சியாகநடித்திருக்கிறார். "பத்னி" தெலுங்குப் படத்திலோ இருவரும் நாட்டியம் மட்டும் ஆடியிருக்கின்றனர். "பஞ்சாமிர்த"த்திலோ மங்களம் கதாநாயகியின் சகோதரியாகத் தோன்றியிருக்கிறார்; யோகம் நடனம் மட்டும் ஆடியிருக்கிறார்.

"யோகம்-மங்களம்"என்ற பெயரைக் கேட்டதும் ஒருவருக்கு முதலில் அவர்களுடைய நடனம்தான ஞாபகத்திற்கு வரும். இன்றைய தினம் அவர்கள அடைந்துள்ள புகழில் பெரும் பாகமும் நாட்டியக் கலையால் ஏற்பட்டதாகும். அதனால்தான் இந்த வர்ணனையின் தலைப்பில்கூட "நடன சகோதரிகள்" என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் நாட்டியம் கற்றுக் கொண்டதோ எதிர்பாராத ஒரு வேடிக்கையான விஷயமாகும்.

"தமிழறியும் பெருமாளி"ல் நடித்த போது அப்படக் கர்த்தர்கள் இந்த சகோதரிகளுக்கு அப்படத்திற்கு அவசிமான அளவுக்குக் கற்பிக்கும்படி செய்து ஆட வைத்தனர். அதன்பின் "ஹரிச்சந்திரா" படம் முடியும் வரை இவர்கள் அத்தந்தப் படத்திற்கு வேண்டிய நாட்டியத்தை அவ்வப்போது கற்றுக் கொண்டே ஆடியிருக்கின்றனர். "ஹரிச்சந்திரா" (ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி தயாரிப்பு) படம் முடிந்ததும் அவர்களை நாட்டியக் கச்சேரிகளுக்கு வரும்படி நாலா பக்கமிருந்தும் அழைப்புகள் வந்



✶

அழகாக அன்ன
நடை போட்டு,
சபையைப் பார்த்
தவாறே அரங்கின்
பிற்கோடிக்குச்
செல்வதில் ஸ்ரீமதி
பாலசரஸ்வதிக்
குப் பிறகு மங்க
ளத்திற்கு இணை
வேறில்லை. வாட்ட
டமான அங்க
அமைப்புகளு
டைய மங்களம்

✶

*

மேடையை அலங்
கரிக்கும்போது
க் கலை அம்சம்
ததும்ப சாஸ்திர
வரையரையினின்
றும் அளியும் வழு
ாது யோகம்
ாட்டியம் ஆடி
ா ரஸிகர்களின்
ாராட்டு தலையும்,
ரகோஷங்களை
ம் பெறுவது
ழக்கம்.

*



யோகம் - மங்களம்

தன. அந்தச் சமயத்தில் அவர்களுக்குக் கதக், மணிபுரி ஆகிய நடனங்களில் மட்டும் கொஞ்சம் பயிற்சி ஏற்பட்டிருந்தது. ஆனால் அவர்களுக்குப் பரத நாட்டியமோ துளிக்கூடத் தெரியாது. ஆதலால் கச்சேரிகளுக்கு அவர்களை அழைத்தவர்களுக்கு, ஒன்று "வர முடியும்" அல்லது "வர முடியாது" என்று திட்டமாய் பதில் சொல்ல முடியாத தர்ம சங்கடம் ஏற்பட்டது. கடைசியில், அவர்கள் சாஸ்திரோக்தமான முறையில் பரத நாட்டியத்தைக் கற்றுக் கொள்ளுவது என்ற முடிவிற்கு வந்தனர்.

அதற்கிணங்க வைதீஸ்வரன் கோயில் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களிடம் அவர்கள் பயிற்சிபெற்றனர். ஸ்ரீ. பிள்ளை அவர்கள் பிரசித்தி பெற்ற மெலட்டூர் ஸ்ரீ. நடேசய்யரிடம் இக்கலையைப் பயின்றவராவர். ஸ்ரீ.ஐயரின் நாட்டியப் பாணி ஒரு தனிப் புதுமாதிரியிலிருந்ததாலும், யோக-மங்களத்திற்குச் சொல்லி வைப்பதில் ஸ்ரீ. பிள்ளையவர்கள் பிரமாதமான சிரத்தை எடுத்துக் கொண்டதாலும் இவர்கள் சீக்கிரமாக பிரபலம் அடைந்து விட்டனர்.

யோகம்-மங்களத்தின் நாட்டிய அரங்கேற்றல் கச்சேரி மயிலை சங்கீதசபாவின் ஆதரவில் 1944-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 27-ம் தேதியன்று ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதனின் தலைமையில் விமரிசையாய் நடைபெற்றது. இக்கச்சேரிக்கு நானும் போயிருந்தேன். அன்றைய ஆட்டம் ரஸிகர்களிடையே ஒரு பிரமிப்பை உண்டுபண்ணி, நல்ல வரவேற்பைப் பெற்றது. அன்று முதல் யோகம் மங்களத்திற்கு ஓய்வு ஒழிவின்றி நடனம் ஆடிக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. அதன் விளைவாக அவர்கள் "ஜகதலப்பிரதாபனி"ல் நடித்து விட்டு படவுலகிலிருந்து கொஞ்ச காலம் விலகியிருந்தனர்.

தமிழ் நாட்டின் பல நகரங்களிலும் இவர்களுடைய நாட்டியக் கச்சேரிகள் நடைபெற்றன. அவர்கள் பிரமாதமான பொதுஜன ஆதரவையும் பெற்றனர். சென்னையில் "கல்பனா" படத்தைத் தயாரிக்க வந்திருந்த உலகப் பிரசித்தி பெற்ற நடனக் கலா வல்லவர் உதயசங்கர் இவர்களுடைய கச்சேரி ஒன்றிற்கு தலைமை வகித்து இவர்களை ஆசீர்வதித்

தார். ஸ்ரீ. உதயசங்கர் சென்னையில் இரண்டு மூன்று வருஷங்களாகத் தங்கியிருந்தாரென்றாலும் இது ஒன்றைத் தவிர வேறு நாட்டியக் கச்சேரி எதற்குமே தலைமை வகிக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது. "கல்பனா" படத்தில் இவர்களை நடிக்கச் செய்வதற்குக் கூட ஏற்பாடாகியது. ஆனால் சில காரணங்களால் அது நிறைவேறவில்லை.

1945ம் வருஷ ஆரம்பத்தில் இவர்கள் திருநெல்வேலியில் ரோட்டரி கிளப் சார்பாக ஆடிய உதவிக் கச்சேரிக்கு ரூ. **37,000** வசூலாயிற்றாம், இரண்டு மாதங்களுக்குப் பிறகு (இக் கச்சேரியை ஏற்பாடு செய்த) கலெக்டர் ஸ்ரீ.வி. என், விஸ்வநாதராவின் மனைவி மாதர் சங்கத்தின் நிதிக்காக இன்னொரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார். இக் கச்சேரிக்கோ ரூ. **47,000** வசூலாயிற்றாம்.

ஜூபிடர் தயாரித்த துண்டு நாட்டியப் படத்தில் கிருஷ்ணனும், சுதாமாவும். (மங்களம், யோகம்)

இதன் பின்னர் **1945**ம் வருஷ மத்தியில் யோகம்-மங்களம் தங்கள் கோஷ்டியுடன் கல்கத்தாவுக்குச் சென்று சுமார் 15 கச்சேரிகளில் ஆடினர். அங்கு இவர்களுடைய கச்சேரிகள் ஒரு பரபரப்பை உண்டு பண்ணி விட்டன. பத்திரிகைகள் இவர்களுடைய ஆட்டச் சிறப்பைப் பற்றி பத்தி பத்தியாக எழுதியிருக்கின்றன. பண்டித அசோகநாத் சர்மா போன்ற பல கலைப் பிரமுகர்கள் இவர்களை மிகப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர்.

கல்கத்தாவில் நியூ எம்பயர், குளோப், சாயா போன்ற பெரிய தியேட்டர்களில் அவர்களுடைய கச்சேரிகள் நடைபெற்றன. நியூ எம்பயரில் நடந்த கச்சேரிக்கு நாட்டியப் புகழ் சாதனா போஸ் விஜயம் செய்திருந்தார். இவர்களுடைய, நடனத்தைப் பார்த்து அகமகிழ்ந்து, இரு மாலைகளை வரவழைத்து, தம் கையாலேயே மேடை மீது அவர்களுக்குச் சூட்டினார். அதோடு நில்லாமல் அவர் இவர்களுக்கு ஒரு சிற்றுண்டி விருந்தையும் அளித்தார்.



யோகம்-மங்களம் நாட்டியக் கச்சேரிக்கு ஸ்ரீ உதயசங்கர் தலைமை வகித்தபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த, சமயத்தில் கல்கத்தாவில் அகில வங்காள சங்கீத மஹாநாடு நடந்துகொண்டிருந்தது. இதில் பெரிய பெரிய சங்கீத வித்வான்களுக்கும் கலா நிபுணர்களுக்கும் மட்டுமே இடமளிக்கப்பட்டது. யோகம்-மங்களம் நாட்டியக் கச்சேரிகள் கல்கத்தாவில் பரபரப்பை உண்டு பண்ணவே அம்மஹாநாட்டு நிர்வாகிகள் இவர்களுடைய கச்சேரிக்கும் ஏற்பாடு செய்தனர். இம்மஹாநாட்டில் கச்சேரி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததே ஒரு பெரிய கௌரவ

மாகும். எல்லோரும் பார்த்துக் களிக்கக் கூடியபடி சாயங்கால நிகழ்ச்சியாக அவர்களது கச்சேரி ஏற்படுத்தப்பட்டது அதை விடப் பெரிய கௌரவமாகும்.

கல்கத்தாவுக்கு அவர்கள் சென்றிருந்த போது நிகழ்ந்த ஒரு மிகமிக முக்கியமான சம்பவத்தை இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாகும். கவி ரவிந்தரநாத் தாகூரின் பேத்தியான நந்தித்தா கிருபாலனி யோகம்-மங்களம் கச்சேரி ஒன்றிற்கு விஜயம்செய்தார். ஸ்ரீமதி நந்தித்தா கதக், மணிபுரி நாட்டியங்களிலும் சங்கீதத்திலும் மிகத் தேர்ந்தஅவர். பரத நாட்டியத்தைப் பற்றியும், அதை ஆடி வருபவர்களைப் பற்றியும் அவரும் சாந்திநிகேதனத்தவர்களும் கேவலமான அபிப்பிராயமே கொண்டிருந்தனர். ஆகவே யோகம் மங்களத்தின் நாட்டியம் உயர்ந்த முறையில் இருந்ததையும், அவர்கள் கௌரவமுள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் என்பதையும் அறிந்து கொண்டதும் ஸ்ரீமதி நந்தித்தா மிக சந்தோஷம் அடைந்து இவ் விஷயத்தை கவியரசரின் புத்திரரான ஸ்ரீ. ரதிந்தரநாத் தாகூரிடம் தெரிவித்தார். அதன் பேரில் ஸ்ரீ. ரதிந்தர நாத் இந்த சகோதரிகளை சாந்தி நிகேதனத்திற்கு வரவழைத்து அவர்களது கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார். கச்சேரி முடிந்த பின் ஸ்ரீ. ரதிந்தரநாத்தும் பரதநாட்டியத்தைப் பற்றிய தம் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டதோடு, கல்கத்தாவிலேயே தங்கி சாந்திநிகேதன மாணவர்களுக்கு பரத நாட்டியத்தைக் கற்பிக்கும்படியும் இந்த சகோதரிகளை வேண்டிக் கொண்டார்.

ஸ்ரீ ரதீந்தரநாத் அவர்களுடன் யோகம், மங்களம் இருவரும் கலை விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அச்சமயம் யோகத்தின் தேகநிலை சரியாய் இல்லாமலிருந்ததால் அவர்கள் சீக்கிரமாகவே சென்னைக்குத் திரும்பிவிட வேண்டியதாயிற்று. கல்கத்தாவிலிருந்து திரும்பியதும் ஸ்டார் கம்பைன்ஸார் தங்கள் "மாயா மச்சிந்திரா" தெலுங்குப் படத்தில் மங்களத்தை நடிக்கவும், இருவரையும் நாட்டியம் ஆடவும் செய்திருக்கின்றனர். இப்படம் சம்பந்தமாக இவர்கள் கோலாப்பூருக்குச் சென்றபோது, அதே ஸ்டுடியோவில் தயாராகி வந்த "மஹாரதி கர்ண" ஹிந்திப் படத்தில் மங்களத்தின் நாட்டியம் சேர்க்கப்பட்டது.

நாட்டியக் கலையில் தேர்ச்சியும், புகழும் அதிகரிக்கவே இவர்களுக்கு சினிமாவுலகிலும் கிராக்கி அதிகம் ஏற்படலாயிற்று. "ருக்மாங்கதன்" படத்தில் மங்களத்திற்கு மோஹினி வேஷம் கிடைத்தது. ஜுபிடர் பிக்சர்ஸார் தங்கள் "ஸ்ரீ முருகன்" படத்தில் அவரை வள்ளியாக நடிக்கச் செய்தனர். இவ்விரு படங்களிலும் மங்களத்தின் ஊழியம் சிறப்பாக அமையவே, ஸ்ரீ. ஏ. வி. மெய்யப்பன் மங்களத்தை தம் "வேதாள உலக"த்தில் கதா நாயகியாகப் போட்டுத் தயாரித்து வருகிறார். ராயல் டாக்கிஸார் தங்கள் "சுதர்சன்" படத்தில் மங்களத்திற்கு ஒரு முக்கியமான வேஷத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஸ்ரீ. மெய்யப்பன் சாதாரண நடிகைகளைக் கூட நக்ஷத்திரமாக ஆக்கிவிடக் கூடியவர்! ராயல் டாக்கிஸாரோ எதையும் திருந்தச் செய்பவர்கள். ஆதலால் இவ்விரு படங்களும் மங்களத்தை நக்ஷத்திரப் பதவிக்கு உயர்த்தி விடும் என்று எதிர்பார்க்கிறேன்.

சகோதரிகள் இருவரில் யோகம்தான் மூத்தவர். அவருக்கு இப்பொழுது வயது **21** ஆகிறது. **1927**-ம் வருஷம் செப்டம்பர் மாஸம் நவராத்திரி தினத்

[தொடர்ச்சி 52ம் பக்கத்தில்]

குண்டூசியைக் கேளுங்கள்

கே. ஸ்ரீனிவாஸன் (திருவாரூர்)

பைத்தியக் காரனில் நடிக்கும் எஸ். வி. சகஸ்ரநாமம் முதலில் நடித்த படம் எது? எது வரையில் படித்திருக்கிறார்?

அவர் இரண்டாம்பாரம் வரை படித்திருக்கிறார். முதன் முதலில் நடித்த படம் "மேனகா."

ஏ. ஸத்தானிஸ்லாஸ் (காரைக்கால்)

டி. ஏ. ஜெயலக்ஷ்மி பைத்தியக்காரனுக்குப் பிறகு எந்தப் படத்தில் நடிக்கிறார்?

டி எஸ். துரைராஜ் தயாரித்து வரும் "பிழைக்கும் வழி"யில் நடித்துக் கொண்டிருக்கிறார் அவர்.

எஸ். எம். பாண்டியன் (அம்பாசமுத்திரம்)

வி. வி. சடகோபனுடைய சொந்த ஊர் எது? தற்போது ஏதேனும் படத்தில் நடிக்கிறாரா?

இல்லை; அவர் சங்கீத சாகரத்தில் மூழ்கி சினிமாவிற்கு ஒரு 'முழுக்குப்' போட்டு விட்டார்! சொந்த ஊர் வீரவநல்லூர்.

கே. ஏ. ஜி. ராஜன் (சேலம்)

மதுரை வீரனுக்குப் பிறகு எம். எம். சிதம்பரநாதன் ஏன் வேறு படங்களில் நடிக்கவில்லை?

உரிமைகளுக்காக தீவிரமாய்ப் போராடும் மனப்பான்மை கொண்ட சிதம்பர நாதனுக்கு சினிமாவில் தொடர்ந்து நடிக்கும் உரிமையை நம் பட முதலாளிகள் அளிக்காமல் ஏமாற்றி விட்டது ஆச்சரியந்தான்!

பி. ஆறுமுகம் (கரூர்)

நான் குமாரி கமலாவை கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து கிண்டல் செய்யாமல் அதற்கான வழியைச் சொல்லவும்.

நீர் கனவு உலகத்தில் சஞ்சரிக்கிறீர், அந்தக் கமலாவோ சினிமா உலகில் பிரகாசிக்கிறாள். 'ஆடிக்' கொண்டேயிருக்கும் அவள் கழுத்தில் தாலியைக்கட்டி விடுவது சுலபம்—என்று உமக்கு எப்படித் தோன்றியது?

எம். தங்கவேலு (பங்களூர்)

டைரெக்டர் கே. சுப்ரமண்யம் ஏதேனும் படத்தில் நடித்திருக்கிறாரா? எனின், எந்தப் படத்தில்?

"அனந்த சயன"த்தில் அவர் முதன் முதலாக நடித்திருக்கிறார். ஆனால் அதுவே அவர் நடித்த கடைசிப் படமாகவும் இருக்க வேண்டுமென்று ரஸிகர்கள் விரும்புகின்றனர்!

"சாமி" (ஜார்ஜ் டவுன், சென்னை)

நடிகர்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் "பி. ஏ." "எம். ஏ." போன்ற பட்டங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறார்களே. இதனால் ஏதேனும் பயன் உண்டோ?

இல்லாமலென்ன? அவர்கள் நேராக நடிப்புத் தொழிலுக்கு வந்து தொலைக்காமல் வீண் படிப்பிற்காக எவ்வளவு ரூபாய்களைச் செலவிட்டி

முருகன் டாக்கீஸார் தயாரித்துவரும் "ரத்ன குமார்" தமிழ்ப் படத்தில் எம். கே. மீனலோசனி நெடு நாளைக்குப் பிறகு காட்சி அளிக்கப் போகிருர்.

ருக்கிருர்கள் என்பதை நாம் அறிய உதவுகிற தல்லவா!

"சினிமா நாதன்" (காஞ்சிபுரம்)

என். எஸ். கிருஷ்ணன் மந்திரிப் பதவிக்காக ஓட்டுக் கேட்டால் பொது ஜன ஆதரவு அதிகமிருக்குமா?

இதைவிட அவர் "ராஜா வேஷம்" கேட்டால் நம் பட முதலாளிகள் தயங்காமல் கொடுத்து விடுவார்களே!

* * *

புகழ் ஏணியில் ஏறிய சில நடிக நடிகைகள் இகழ் ஏணி வழியாக இறங்கி விடக் காரணம் என்ன?

அதற்கு மேலும் ஏறிச் செல்லுவதற்கோ, தங்கி யிருப்பதற்கோ இடம் இல்லாத காரணத்தால்தான்,

நா. அ. கரீம் (கண்டி)

எம். எஸ். திரௌபதியும், எம். எஸ். பாக்யமும் சகோதரிகளா?

தொழில் அளவில் மட்டும் சகோதரிகள். இருவருக்கும் நாடக மேடையில் அனுபவமுண்டு. அவ்வளவுதான்.

எல். கிருஷ்ணமூர்த்தி (கோயமுத்தூர்)

லக்ஷ்மி விஜயம் படத்தில் மாதுரி தேவி பாடுகிருரே; அது அவர் சொந்தக் குரலிலா அல்லது இரவல் குரலிலா? அவர் இதற்கு முன் படங்களில் நடித்திருக்கிருரா?

நடித்திருக்கிருர். "வாயாடி—போலிப் பாஞ்சாலி"யில் எம். எஸ். சந்திரா என்ற பெயருடன் தோன்றி யிருக்கிருர். அவர் பாடுவது இரவல் குரலில் தான்.

நா. பாபநாசப் பெருமாள் (பணகுடி)

சந்திரசேனுவில் நடித்த ராஜீவி ஏன் அதன் பின் நடிக்கவில்லை?

அந்த ஒரு படத்தில் நடித்ததே அவருக்குப் போதுமென்ருகி விட்டதால் பேசாமல் 'குடும்ப வாழ்க்கை'யில் ஈடுபட்டு விட்டார்.

ஆர். கே. ஜயகுமார் (நத்தம்)

மிஸ் மாலினியில் புஷ்பவல்லி பாடுவது சொந்தக் குரலிலா?

புஷ்பவல்லிக்குப் பாடத் தெரியாது. அவர் குமாரி ரத்னத்தின் குரலை இரவல் வாங்கிக் கொண்டிருக்கிருர்.

டி. எம். தாஸ் (சித்தூர்)

தெய்வ நீதி படத்தைப் பார்த்ததும் எனக்குஒன்றுதோன்றுகிறது. பி. கண்ணும்பா முன் ஜென்மத்தில் பாண்டியனின் விரோதியாய் இருந்திருப்பார் போலிருக்கிறது. ஆதலால்தான் சினிமாப் படங்களில் அவர் பாண்டியனுடன் விசேஷமாகத் தர்க்கம் செய்து வருகிருர் என்கிறேன்.

வாஸ்தவந்தான்; அந்த விரோதமோ காற் சிலம்பினுல் ஏற்பட்டதென்று நான் கூறுகிறேன்.

ஜி. இஸ்ரவேல் (கோவில்பட்டி)

தாஸி அபரஞ்சியில் நடித்த எம். எஸ். சுந்தரிபாய், கஞ்சனில் நடிக்கும்

எம். எஸ். சிவபாக்யம் இவர்களுடைய முகத்தோற்றம் ஒரே மாதிரி இருக்கிறதே. இருவரும் ஒரே நபர்தானா?

இல்லையில்லை.

எஸ். சுப்பையா (முக்கூடல்)

கன்னிகாவில் நடித்திருக்கும் வரதன் சரோஜினியின் சொந்தக் கணவன்தானா?

அப்படி யாராவது சொன்னால் நம்ப வேண்டாம்.

கு. குழந்தைவேல் (ராஜபாளையம்)

டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

முதலியார் ஜாதியைச் சேர்ந்தவர்.

எம். அபரஞ்சி (சேலம்)

நான் ஒரு மந்திரியானால் தமிழ் சினிமாப் படம் தயாரிப்பவர்களுக்காக பிரத்தியேகமாய் ஒரு வாசகசாலையை ஏற்படுத்துவேன்.

நான் ஒரு மந்திரியானாலோ, கலைக் கொலையை உயிர்க் கொலைக்கு இணையாக மதித்து தண்டனை கொடுக்கும்படி சட்டம் இயற்றுவேன்.

எம். எஸ். குப்புசாமி (மாம்பலம்)

எம். எஸ். சரோஜினியின் வயதென்ன? அவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? விலாஸத்தையும், சுருக்கமாக அவரது வரலாற்றையும் தெரிவிக்கவும்.

சுமார் 25 வயதான எம். எஸ். சரோஜினி ரேடியோ புகழ் எம். எஸ். மோகனம்பாளின் இளைய சகோதரி ஆவார். தேவதாஸி வகுப்புத் திலகங்களில் அவரும் ஒருவர். முன்பெல்லாம் அவர் தம் சகோதரி நடித்த படங்களில் சிறு வேஷங்களில் தோன்றி வந்தார். "ஆர்யமாலா"வில் அவருக்குப் பிரதம பாகம் கிடைத்ததும் அவர் பிரபலம் அடைய ஆரம்பித்தார். அவரது விலாஸம்:— c/o பக்ஷிராஜா ஸ்டுடியோ, கோயமுத்தூர்.

பி. நாராயண பெருமாள் (மைலாண்டி)

சின்னப்பாவிடம் ஒருவர் கேட்ட கேள்விக்கு தமிழ்ப்பட உலகம் முன்னேற வேண்டுமானால் ரஸிகர்கள் ஆபாசத்தை விரும்பாமல் இருக்க வேண்டுமென்று பதிலளித்திருக்கிறாரே. பட முதலாளிகள் நல்ல படங்களைக் கொண்டுவர முயற்சிப்பது சுலபம் அல்லவா?

பழியை பிறர்மீது சுமத்துவதற்கு நம் பட முதலாளிகள் காட்டும் காரணம் இதுதான். ஜனங்கள் விரும்புவது ஆபாசத்தையேதான் என்றால் கூட பட முதலாளிகள் அதை தம் படத்தில் நிரப்புவது கேவலமல்லவா?

எம். ஏ. தியாகராஜன் (முத்தியாலு பேட்டை)

கன்னிகாவில் வரதன் பேசுவதற்கும் பாடுவதற்கும் குரலில் வித்தியாசம் இருக்கிறதே. அந்தப் பாட்டுகள் அவராலேயே பாடப் பட்டவையா?

இல்லையென்று நான் முன்பே தெரிவித்திருக்கிறேனே.

என். ஓ. ஏ. ஜாபர் உசைன் (கண்டி)

என். எஸ். கிருஷ்ணனுடைய விலா

மங்கையின் மனதைக் கவருவதற்காக (சின்னப்பா பானுமதியிடம்) மனம் விட்டு ஏதோ சொல்கிறுப் போலிருக்கிறது.

ஸத்தை தயவு செய்து தெரியப் படுத்த வும்.

எனெஸ்கே பில்ம்ஸ், வெங்கடராமய் யர்தெரு, தியாகராயநகர், சென்னை 17 -என்பது அவரது தற்போதைய விலா ஸம்.

எம். ஏ. ராஜன் (மண்ணடி)

சென்னையில் சினிமாத் தியேட்டர் ஏதேனும் கிரயத்துக்குக் கிடைக்குமா? அப்படி இருந்தால் தெரிவிக்கவும்.

தற்சமயம் சென்னை தியேட்டர் எதுவும் விலைக்கு வருவதாகத் தெரியவில்லை. படங்களைக் காட்டுவதற்கான தியேட்டர் வாடகைகளை அவர்கள் வாய் கூசாமல் ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லுவர். அதைக் கேட்கும் நீர், அவர் தம் தியேட்டருக்கு விலை கூறுகிறாரோ என்று தவறாக நினைத்துக் கொண்டு விடக் கூடாது.

என். வி. காஞ்சனு (தாழக்குடி)

குஹன் பிக்சர்ஸ் வி. குமாரின் சொந்தக் கம்பெனியா? குமாரின் சொந்த ஊர் எது? விவாகமாகி யிருக்கிறதா? மனைவி யார்?

குஹன் பிக்சர்ஸ் வி. குமாரின் சொந்தக் கம்பெனி அல்ல. எனினும் அவருக்கு சொந்தக் கம்பெனி போன்ற சலுகை காட்டப் பட்டு வருகிறது. அவருடைய சொந்த ஊர் நாகர்கோயில். அவர் முன்பே விவாகமானவர். இப்பொழுதோ ராஜலக்ஷ்மி என்ற நடிகை அவருடைய தொழில் பங்காளியாகி யிருக்கிறார்.

சந்திர சேகரன் (கரூர்)

அம்பிகாபதியில் ராஜ சபையில் கச்சேரி செய்பவர் ஹொன்னப்பாவா?

ஆம்; இதே ஹொன்னப்பாதான்.

சி. ஆர். வீரராகவலு (பார்க் டவுன்)

ஹிந்தி மீராவுக்குப்பின் எம். எஸ். சுப்புலக்ஷ்மி எந்தப் படத்தில் நடிக்கிறார்; அல்லது நடித்துக் கொண்டிருக்கிறார்?

அதை அறிய உம்மைப் போலவே நானும் ஆவலாயிருக்கிறேன்.

இ. மா. ஷண்முகம் (இருமத்தூர்)

மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் தயாராவதாக விளம்பரம் செய்யப் பட்ட சிவப்ரகாசம் என்ன வாயிற்று?

இதில் சம்பந்தப் பட்டிருந்த ஒரு நடிகையின் பிரசவத்திற்காக படத் தயாரிப்பு தடைப்பட்டது. பிறகு இப் படத் தயாரிப்பு தடைப்பட்ட பிரசவமாகவே ஆகிவிட்டது!

து. வி. தா. சொக்கலிங்கம் (துடுப்பதி)

தியாகி படத்தில் வி. என். ஜானகி ஹரிஜனப் பெண்ணாக நடித்து தியாகம் செய்கிறாரே? உண்மையில் அவர் இதுவரை ஹரிஜனங்களுக்குப் பொருள் உதவியோ அல்லது வேறு உதவியோ செய்திருக்கிறாரா?

நீர் படத்தில் காண்பதெல்லாம் "நடிப்பு" என்பதை ஏன் மறந்து விடுகிறீர்?

சந்தேக சிசை காதல் சிசையாக மாறிய கட்டம் இது. "பில்ஹணனி"ல் டி. கே. ஷண்முகமும், எம். எஸ். திரௌபதியும்.

ச. ச. அப்துல் ஹமீது (நுவரெலியா)

வஸந்த கோகிலம், எம். எஸ். சுப்புலக்ஷ்மி. டி. கே. பட்டம்மாள் ஆகிய மூவரில் பாட்டில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

வஸந்த கோகிலம் இரண்டாவது ஸ்தானத்தை விட்டு முதல் ஸ்தானத்திற்கு தாவாமலே இருந்து வருகிறார். ஆனால் முதல் ஸ்தானத்தையோ பங்கு போடாமல் மற்றிருவரில் ஒருவருக்கே முழுதாகக் கொடுத்து விடுவது சாத்தியமாயில்லை.

எம். எ. எஸ். இபுறுகிம் (கண்டி)

யு. ஆர். ஜீவரத்தினத்திற்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

விவாஹம் ஆகி விட்டது. தற்போதைக்கு "குழந்தை உண்டா?" என்றுதான் கேட்டிருக்க வேண்டும். "குழந்தைகள் உண்டா?" என்று கேட்பதற்கு இன்னும் சில மாதங்கள் கழிய வேண்டும்.

டி. எஸ். சுப்ரமண்யம் (திண்டிவனம்)

தியாகராஜ பாகவதர், ஹொன்னப்பா...(முதலான 20 நடிகர்கள்)... டி. ஆர். ராஜகுமாரி (முதலான 20 நடிகைகள்)...இவர்களுடைய பெற்றோர்கள், சொந்த ஊர், ஜாதி முதலியவற்றைத் தெரிவியும்.

இவ்வளவு பேர்களுடைய வரலாறுகளையும், ஒரேயடியாய் இங்கு தெரிவிப்பது சாத்தியமல்ல. ஆதலால் தான் தடவைக்கு ஒருவருடைய வாழ்க்கையாக "குண்டூசி" யில் வர்ணிக்கப்பட்டு வருகிறது. இது தவிர என்னுடைய "நக்ஷத்திர மாலை" ஒன்று, இரண்டு மாலைகளில் நீர் மேலே குறிப்பிட்டிருக்கும் ஜாபிதாவிலுள்ள அநேகருடைய வாழ்க்கை அடங்கி யிருக்கிறது. அவற்றை வாங்கிப் படியும்.

சக்திவேல் (ஏரல்)

தவமணி தேவியின் சொந்த ஊர் எது? கூடப் பிறந்தவர்கள் யாரேனும் உண்டா? விவாஹம் ஆகி விட்டதா?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவமணிக்கு ஒரு அண்ணன் உண்டு என சொல்லப்படுகிறது. சில விஷயங்களில் திடீர் விளம்பரம் செய்து கொள்ளுவதில் சாந்தா ஆப்தேயைப் பின்பற்றும் தவமணி, தாம் மணக்கக்கூடிய மணாளனின் யோக்கியதாம்சங்களையும் (ஆப்தேயைப் போலவே) வெளியிட்டாலும் வெளியிடலாம்!

குரலினிய எம். எஸ். விஜயாள் பல வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது "சண்பகவல்லி"யில் நடித்து வருகிறார்.

சுப்ரமண்யம் (வேலூர்)

"ஜீவ ஜோதி" யில் நடிக்கும் கிருஷ்ணவேணியின் சொந்த ஊர் எது? விவாஹமாகி விட்டதா? இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

கிருஷ்ணவேணியின் சொந்த ஊர் கும்பகோணம். அவர் பட்டுக்கோட்டை ஆர். எம். கதிர்வேல் செட்டியாரை மணந்து கொண்டிருக்கிறார். தற்போது செட்டியார் பம்பாயில் தயாரித்து வரும் "சம்சாரம்" என்னும் படத்தில் கிருஷ்ணவேணி தான் கதாநாயகி.

ஏ. இராமகிருஷ்ண (சென்னை)

நாம் இருவர் படத்தில் நடித்த டி. ஏ. ஜெயலக்ஷ்மி, ஏ. வி. எம். கம்பெனியி லிருந்து விலகி விட்டாரா? இப்பொழுது அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

அவர் ஏ. வி. எம். கம்பெனியிலிருந்து விலகி (சேலம் மரகதா பிக்சர்ஸாரின்) "பிழைக்கும் வழி"யில் ஈடுபட்டிருக்கிறார்!

எஸ். என். ஸ்ரீதரன் நாயர் (நாவாய்க் குளம்)

எனக்கு சங்கீதத்தில் கொஞ்சம் ஞானம் உண்டு. தமிழ் சுத்தமாகப் பேசத் தெரியும். எனக்கு சினிமாவில் சேர்ந்து நடிக்க ஒரு உபாயம் சொல்லும்.

இந்த விஷயத்தில் நான் உமக்குச் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. உம் ஜாதகத்தை ஒரு ஜோஸியரிடம் காண்பித்து, அதிருஷ்டம் இருப்பதாகத் தெரிந்தால் பட முதலாளிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும்.

வைரம் அருணாசலம் செட்டியார் தயாரித்துக் கொண்டிருக்கும் "குடும்ப வாழ்க்கை"யில் ஆரம்பக் கட்டம் இது. (முத்து லக்ஷ்மி, ...)

"நம்ம டைரெக்டர் விஸ்வம் சினிமாக் கலைக்கு ஒரு மாபெரும் சேவை செய்திருக்கிறாரே, தெரியுமோ?"

"அப்படி யென்னப்பா பெரிய சேவை செய்துட்டார்?"

"அதுவா. அவர் இனிமேல் படம் டைரெக்ட் செய்யவே போவதில்லையாம்?"

—ஆர். வரதராஜன், மதுரை.

வி. கோவிந்தராஜுலு (திருக்கோயிலூர்)

டி. ஆர். ராஜகுமாரி ஒரு சினிமாத் தியேட்டரைக் கட்டப் போவதாக வதந்தி உலாவியதே? அது என்ன வாயிற்று?

இது வதந்தியல்ல; உண்மையான செய்திதான். அந்தத் தியேட்டர் முக்கால்வாசி கட்டப்பட்டு விட்டது.

"பிரம்மச்சாரி" (பண்ருட்டி)

எம். வி. ராஜம்மா, திருச்சூர் பிரேமாவதி இவர்களுக்கு விவாஹம் செய்து கொள்ளும் உத்தேசம் உண்டா?

யாரை, உம்மையா? நிச்சயம் இல்லை, ஸ்வாமி!

ஏ. கே. முஹமத் (கொளும்பு)

கே. எல். வி. வஸந்தா, தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

எதிலுமில்லை.

"நாதன்" (பண்ருட்டி)

1936-ல் தயாரான நவீன வாலிபன்' என்ற படம் வெளி வந்ததா? அதில் நடித்த பிக்ஷாவதி வேறு ஏதாவது படத்தில் நடித்திருக்கிறாரா?

இதே படம்தான் "நவயுவன்" என்ற பெயரோடு வெளி வந்தது. பிக்ஷாவதி அந்த ஒரு படத்துடனேயே தலை மறைந்து விட்டார்.

எம். சிவபூஷணம் (திருவள்ளூர்)

எங்கள் ஊரிலுள்ள லக்ஷ்மி தியேட்டரில் புதுப் படங்களே வருவதில்லை, ஏன்?

பழைய படங்களையே உங்கள் ஊர் வாசிகள் விரும்புவதாக இத் தியேட்டர் நிர்வாகிகள் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

எஸ். லக்ஷ்மணன் (திருச்சி)

முபாரக் பில்ஹணன் படத்தின் ஷூட்டிங் முடிந்து விட்டதா? எப்பொழுது வெளிவரும்?

படம் பாதி முடிந்து விட்டதாகக் கேள்வி. மற்ற பாதி எப்போது முடியுமோ தெரியவில்லை.

வி. வைத்திலிங்கம்
(ஜோகூர்பாரு, மலேயா)

கேள்விகளுக் கெல்லாம் தாங்கள் சரியான பதில் கொடுத்து வருகிறீர்கள். தங்கள் "குண்டூசி"யை நான் தவறாமல் படித்து ஆச்சரியம் அடைகிறேன். தங்களுக்கு சினிமாவில் எத்தனை வருஷ அனுபவம் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

தங்கள் பாராட்டுதலுக்கு என் நன்றி. எனக்கு சுமார் 17-வருஷ கால அனுபவம்.

கே. பழனியப்பன் (ஜோகூர்பாரு)

குண்டூசியாரே! உமக்குத் தாய் தகப்பன் இருக்கிறார்களா? அவர்களுடைய பெயர்களைத் தெரிவிக்கவும்.

தாயார் தையல் ஊசியும், தந்தை கொண்டை ஊசியும், தம்பி கிராமபோன் ஊசியும் என்னைப் போலவே சர்வ வியாபிகளாயிற்றே! உமக்குத் தெரியாதா, என்ன?

கே. எஸ். மணி (வத்தலக்குண்டு)

சினிமாப் படங்களில் பிறருக்கு இரவல் குரல் கொடுப்பவர்களையே போட்டுப் படத்தைத் தயாரித்தால் என்ன?

இம்மாதிரி செய்ய ஆரம்பித்து விட்டால் நாம் பிறர் கண்களை இரவல் வாங்கிக் கொண்டுதான் அப்படங்களை பார்க்க வேண்டியிருக்கும்!

கி. ராமச்சந்திரன்
(திருமலைராஜன்பட்டிணம்)

பர்மா ராணிக்குத் தடை விதிக்கப் பட்டதின் காரணம் என்ன?

அப்படத்தில் பௌத்த மதத்திற்கும் பர்மிய வழக்கத்திற்கும் ஒவ்வாத சில காட்சிகள் இருப்பதாக பர்மா சர்க்கார் ஆட்சேபித்தார்களாம். அதன் விளைவாக இப்படத்தைக் காட்ட வேண்டாமென்று இந்திய சர்க்கார் கூறி விட்டனர். பட முதலாளிகளுக்கு நஷ்ட ஈடு செய்யப் படும் என்றும் தெரிகிறது.

பத்திரிகைகளில் கொஞ்ச காலம் கைவரிசையைக் காட்டிவந்த டி. ஆர். எஸ். ராகவன் இப்பொழுது "குடும்ப வாழ்க்கை" படத்தில் இப்படிப் பல் வரிசையைக் காட்டுகிறார்.

ச. என். சிவம் (உடுமலைப்பேட்டை)

டி. ஆர். மஹாலிங்கத்திற்கு விவாஹமாகி விட்டதா? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

ஐயர் ஜாதியைச் சேர்ந்த மஹாலிங்கத்திற்கு விவாஹமாகி விட்டது; அதோடு ஒரு புத்திரனும் உண்டு.

கே. என். முத்து (கொழும்பு)

என் நண்பர் ஒருவர் சினிமாவில் சேருவதற்கு மிக ஆவலாயிருக்கிறார்.

சினிமாவில் நுழைந்து விட்டாலே வெளியேறினால் போதும் என்ற ஆவல் அதிகரித்து விடும் என்பதை உம் நண்பரிடம் சொல்லி வையும்!

மு. ராமசாமி (மதுரை)

பெண்களால் டைரெக்ட் செய்யப்பட்ட படம் ஏதேனும் உண்டா?

உண்டு. "மிஸ் கமலா" என்ற படம் டி. பி. ராஜலக்ஷ்மியால் டைரெக்ட் செய்யப்பட்டதாகும். "எஸ். டி. சுப்புலக்ஷ்மி பல வருஷங்களாக டைரெக்டர் கே. சுப்ரமண்யத்தின் 'நிழலி'லேயே இருந்து வருகிறார். இப்பொழுதோ நடிப்பதற்கும் லாயக்கில்லாமல் போய்க் கொண்டிருக்கிறார். ஆதலால் இனி அவர் டைரெக்ஷனில் இறங்கினால் இந்த ஏக போக உரிமையில் பங்கு கொள்ளலாமே!" என்று ஒருவர் கேட்கிறார்!

"நீர் எத்தனையோ இடங்களில் சமையல் வேலை செய்திருப்பதால் சொல்கிறீரே, அத்தாட்சிப் பத்திரம் ஏதேனும் இருக்கிறதா?"

"என்னங்க, நீங்களே பார்த்திருப்பீங்களே..."

"என்ன...நானு?..."

"ஆமாங்க, நீங்க நான் நடிச்ச படம் ஒண்ணைக் கூடப் பார்த்ததில்லையா?"

—பி. பாலுசாமி, கோயமுத்தூர்.

எஸ். கே. டி. அப்ருமுசா (மன்னார்)

பி. பி. ரங்காச்சாரி படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டாரா?

மெதுவாகக் கேளும்; அவர் காதில் விழுந்தால் சண்டைக்கு வந்து விடுவார்! சமீபத்தில் வெளி வந்துள்ள "மதன மாலா"வில் அவர் நடித்திருக்கிறாரய்யா!

பி. வி. சுப்ரமண்யம் (தியாகராயநகர்)

உதயணனுக்குப் பிறகு வசுந்தரா என்ன செய்கிறார்?

"நாட்டிய ராணி"யை அந்தரத்தில் விட்டு விட்டு "தீவாளி"யைத் தயாரிக்க பம்பாய்க்குப் போனார். ஆனால் வெளிக் கொண்டு வந்ததென்னவோ படத்தையல்ல; ஒரு குழந்தையை!

எம். கே. மூர்த்தி (திருவள்ளூர்)

லியோ பில்ம்ஸாரின் சிவயோகி என்னவாயிற்று?

இந்த மாஸத்தில் மீண்டும் ஷூட்டிங் ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.

பீ. கே. பி. ஸ்வாமி (கடலூர் என். டி.)

பி. யு. சின்னப்பா முன்போல் ஏன் அடிக்கடி படங்களில் நடிப்பதில்லை?

முன்போல் அடிக்கடி படங்கள் தயாரிக்கப் பட்டாலல்லவோ அவரும் அடிக்கடி நடிப்பதற்கு?

எம். எஸ். பி. சாமி (வத்தலகுண்டு)

பி. யு. சின்னப்பா, டி. எஸ். பாலய்யா, எம். ஜி. ராமச்சந்திரன் இம்மூவரும் கத்திச் சண்டை போட்டால் யார் ஜெயிப்பார்கள்?

கத்தி, சண்டை போடுவதென்றால் சின்னப்பாவின் குரல்தான் ஓங்கி நிற்கும்!

செய்திப் படங்கள்

"ரத்ன குமார்" படத்தில்
நடிக்கும் பானுமதி

ஜூபிடரின்
அபிமன்யு" படத்தில்
குமரேசன்

"ரத்னகுமாரி"ல்
நிறம்பட நடிக்கும்
மீனலோசனி



இடது
எனெஸ்கே
" நல்ல தம்பி "
வலது
" இது நிஜ
ஒரு

இடது
இத
" குடும்ப

வலது
டி.
சகோ
" பில்
! ஒரு

ம் :
ல்ம்ஸின்
ில் ஒரு தமாஷ்

றம் :
மா!"வில்
காக்ஷி

★

புறம் :
தான்
ாழ்க்கை"!

★

புறம் :
. எஸ்.
ரர்களின்
ணி"ல்
காக்ஷி

★

"சம்ஸார நௌகா"வில்
சூரிய குமாரி
இனிமையாய் பாடுகிறார்

"ஞானசௌந்தரி"யில்
புளிமூட்டை
இப்படிச் சிரிக்கிறார்

தண்ணீர் கொண்டுவரப் போன இடத்தில் கண்ணில்பட்ட கட்டழகனைக் கூர்ந்து கவனிக்கிறார்கள் ("கங்கணம்" படத்தில்) மேனகாவும், லக்ஷ்மியும்

நுனிப்புல்

வெட்டுக்கிளி

பொதுவாக, சினிமா நக்ஷத்திரங்கள் ஏராளமாக சம்பாதிப்பதாகவும், ஏராளமாக செலவழிப்பதாகவும் தானே நினைக்கிறீர்கள்? ஏராளமாகச் சம்பாதிப்பவர்களைப் பற்றி நான் இங்கு குறிப்பிடப் போவதில்லை. ஆனால் ஏராளமாகச் சம்பாதித்துவிட்டு அளவுக்கு மீறி சிக்கனமாக இருப்பவர்களைப் பற்றித்தான் கீழே குறிப்பிடப் போகிறேன்.

* * *

பிரபலமாகியுள்ள நக்ஷத்திரங்களுக்குக் கூட பத்திரிகைகளில் தங்கள் போட்டோக்கள் வரவேண்டுமென்ற ஆசைதான். ஆனால் அவர்கள் நிறைய நிறைய சம்பாதிக்க மிகமிக சிக்கனம் அவர்களுடன் உறவாடும். ஆதலால் சொந்தச் செலவில் போட்டோ எடுக்கவே மாட்டார்கள். கூடுமான வரையில் பட முதலாளிகள் தலையிலேயே இந்தச் செலவைப் போட்டுவிடுவார்கள். இல்லாத வரை அவருடைய படத்தின் 'ஸ்டில்' போட்டோக்களை தாராளமாய் வாங்கிக் கொள்ளும்படிச் சொல்லி விடுவார்கள்!

* * *

மிகப் பிரபலமாயுள்ள வேறு சில நக்ஷத்திரங்கள் தங்களுடைய போட்டோக்களோ தங்களைப் பற்றிய செய்திகளோ பத்திரிகைகளில் வெளிவராமலிருப்பதற்கு முயற்சிக்கிறார்கள். காரணம் தங்களுக்கு 'வருமானம் அதிகமில்லை' என்று வருமான அதிகாரிகளிடம் முறையிட்டுக் கொள்ளுவதற்கு இவை குறுக்கே நிற்குமாம்! இவர்கள் கூறுவதிலாவது கொஞ்சம் அர்த்தமிருக்கிறது. இன்னொரு நக்ஷத்திரம் கூறியதைக் கேட்டால் பிரமித்துப் போவீர்கள். பிரஸ்தாப நக்ஷத்திரத்தை போட்டோ எடுத்துக்கொண்டு வருவதற்காக போட்டோ எடுப்பவருடன் அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அந்த நக்ஷத்திரம் ஒரு சாதாரணப் புடவையுடனும் கழுத்தில் ஒரே ஒரு மெல்லிய செயின், கையில் இரண்டே ஜோடி வளையல்கள் இவற்றுடன் போட்டோவுக்கு வந்து உட்கார்ந்தார். "ஏன், நகைகள் அதிகமாய்ப் போட்டுக் கொள்ளவில்லை?" என்று கேட்டேன் நான். "அந்த சுமைமையை எல்லாம் படத்திற்காக சமக்கிறோமே, போதாதா?" என்று சாதுரியமாய் கூறிவிட்டார். ஆனால் உண்மைக் காரணம் அதுவல்ல வென்பதை நான் ரகஸியமாகத் தெரிந்துகொண்டேன். சொந்தமாக எடுக்கப்படும் போட்டோவில் விலையுயர்ந்த நகைகளைப் போட்டுக் கொண்டு காக்ஷியளித்தால் வருமான வரி. அதிகாரிகள் அவர்களுக்கு அதிக "மதிப்பு" வைத்து விடுவார்களல்லவா! இந்த சிக்கனம் எப்படி?

* * *

நக்ஷத்திரங்களிடம் பணம் சேர ஆரம்பித்ததும் முதல் செலவாக மோட்டார் வாங்குவது வழக்கம். ஆனால் சென்ற 12 வருஷ காலமாக (பெரும்

பாலும் தாயார் வேஷங்களில் தோன்றிவரும்) ஒரு பிரபல நடிகை மட்டும் இதுவரை மோட்டாரே வாங்காமல் காலந் தள்ளி வருவது எனக்கு ஆச்சரியமா யிருந்தது. அதைப் பற்றி கேட்டும் விட்டேன். அதற்கு அவர் சொன்ஞர்: "சதா இரண்டு மூன்று படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். கார் வேண்டுமானல் ஒருவர் இல்லாவிட்டால் இன்னெருவர் அனுப்பி விடுகிருர். சொந்தக் கார் வைத்துக் கொண்டாலோ இரவல் கொடுக்கத் தான் சரியாயிருக்கும். அது மட்டுமா? பெட்ரோலையும் போட்டு அனுப்ப வேண்டுமே" என்ருர். வாஸ்தவம் தானே!

* * *

செலவு விஷயத்தில் இவ்வளவு சிக்கனமாக இருக்கும் இவர் விஷயத்தில் கடவுளுக்கென்னவோ அவ்வளவு பொருமை! சந்தான பாக்கியத்தில் மட்டும் இந்த நடிகை சிக்கனத்தை அனுஷ்டிக்க முடியாமல் செய்திருக்கிருர்!

* * *

சிக்கனத்திற்கு சினிமா உலகில் ஏராளமான உதாரணம் கிடைக்கும். மாதிரிக்காக இன்னும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

பதினயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் ஒரு பிரபல நடிகர் புகை பிடிப்பதில் மிகுந்த சிக்கனமாய் இருக்கிருர். ஒரு முறை ஒரு பீடியை பாதி பிடித்து அணைத்து விட்டு சிறிது நேரத்திற்குப் பின்னர் அதையே மீண்டும் பற்ற வைத்துக் கொள்வாராம்! "ஏதோ பீடி விஷயமா யில்லாமல் விலை அதிகமான சிகரெட் விஷயத்தில் இந்த சிக்கன முறையைக் கையாண்டாலாவது போனல் போகட்டும் என்னலாம்" என்கிறீர்களோ!

* * *

நடிகை தவமணி தேவி சினிமாவுக்காக லக்ஷக்கணக்கில் செலவழித்து வருவதாகச் சொல்கிருர். ஆனல், பாருங்கள், இந்த ஆடை விஷயத்தில் எவ்வளவு சிக்கனமா யிருக்கிருர்!

* * *

டைரெக்டர் ராஜா சாண்டோ இருந்தாரே; அவர் ரொம்ப தாராள புத்தியுடையவர் என்று சொல்லுவார்கள். ஆனல், அவர் பிறருக்கு மரியாதை கொடுக்கும் விஷயத்தில் எவ்வளவு கருமியாய்இருந்திருக்கிருர் தெரியுமா?

* * *

பிரபல நடிகர் எம். வி. மணி எல்லோரிடமுமே தாராள மனதுடன் நடந்து கொள்கிருரே என்று நினைக்கிறீர்களோ? அவர் சம்பளம் கேட்கும் விஷயத்தில் ரொம்ப சிக்கன புத்தியை காட்டி விடுவார்!

* * *

நம் பட முதலாளிகள் சிக்கனமாய் இருப்ப தெல்லாம் கலை விஷயம் ஒன்றில்தான்!

* * *

நீங்கள் கேட்கலாம்: "சில நடிக நடிகைகன் தம் நடிப்பு விஷயத்தில் சிக்கனமா யில்லையா?" என்று. வாஸ்தவமே!

* * *

படத் தொழிலில் ஈடு பட்டிருக்கும் நூற்றுக்குத் தொண்ணூற்ரென்பது பேர்களிடம் காணப்படும் சிக்கனம் நன்றியறிதலில் தான்.

* * *

சினிமா நடிகை ஏ. ஆர். சகுந்தலா வழக்கம் போலவே இந்த மாஸம் தம் பிறந்த நாளைக் கொண்டாடினர். அவருக்கு சீக்கிரமேவிவாஹம்நடக்கப் போகிறதாம். ஆதலால், ஒரு ரஸிகர் கேட்கிருர்: "இனிமேல் பிறந்த நாளோடு கூட விவாஹ தினத்தையும் கொண்டாடுவாரோ?" என்று. மேற்படி பிறந்த நாள் சம்பந்தமான சிற்றுண்டி விருந்தைச் சாப்பிட்டு வந்த இன்னெருவர், "சீக்கிரமாக அவருக்குக் குழந்தை பிறந்து விட்டால் அதன்

பிறந்த நாளையும் கொண்டாடலாம்'' என்று யோசனை கூறுகிறார்!

* * *

சில தினங்களுக்கு முன் வெளி வந்துள்ள ஜம்பம் படப் பாட்டுப் புஸ்தகத்தில் கிருஷ்ண குமார் படத்தின் விளம்பரம் வெளியிடப் பட்டிருக்கிறது. அப் படத்தின் நடிகர் ஜாபிதாவில் மற்ற பெயர்களோடு கூட காலஞ்சென்ற வி. ஏ. செல்லப்பாவின் பெயரும் காணப்படுகிறது, இது சில வருஷங்களுக்கு முன்பே தயாரான ஒரு பழைய படம் என்ற விஷயத்தை அறியாத ஒரு சினிமா ஆசிரியர், மேற்படி பட முதலாளிகளை கேலி செய்யும் பாவத்தில், "இப்படி ஒரு படம் தயாராகிறது. இதிலே ஒரு விசேஷம் என்ன வென்றால் காலஞ் சென்ற வி. ஏ. செல்லப்பாவின் பெயரையும் சேர்த்திருக்கிறார்கள்!'' என்று எழுதியிருக்கிறார்! அந்தப் பட முதலாளிகளென்னவோ காலஞ்சென்ற வி. ஏ. செல்லப்பா மீண்டும் உயிர் பெற்றுவந்து நடிக்கப் போவதாகச் சொல்லவில்லை!

* * *

சினிமா ஆசிரியர்கள் "எல்லாம் தெரிந்தவர்களாக'' இருக்க முடியாதென்பது உண்மை; அது சாத்தியமற்றதுங் கூடத்தான். ஆனால். சாதாரணமான சில விஷயங்கள்கூட தெரியாதவர்கள் பத்திரிகை நடத்துவதற்கு முற்படுவது நகைப்பிற்கு இடமாகிறதல்லவா?

* * *

சினிமா ஆசிரியர்களுக்கு மட்டும் தான் பெயர்க் குழப்பம் ஏற்படுகிறதாக்கும் என்ற எண்ணம் வேண்டாம். அந்தக் காற்று பானர்கள் தயாரிக்கும் சித்திரக்காரர்கள் மீதும் அடிக்கத் தொடங்கியிருக்கிறது. சமீபத்தில் சென்னையில் வெளி வந்திருக்கும் துளஸி ஜலந்தர் விளம்பரபானர்களில் ஆர். பாலசுப்ரமண்யம் என்பதற்குப் பதில் டி. பாலசுப்ரமண்யம் என்று போட்டிருக்கிறது. எதிர்பாரா தவகையில் விளம்பரம் கிடைக்கப் பெறும் டி. பாலசுப்ரமண்யத்திடமிருந்து விளம்பரச் சார்ஜுகளை வசூலித்து ஆர். பாலசுப்ரமண்யத்திடம் நஷ்ட ஈடாகக் கொடுக்கலாம்!

* * *

இது போல் தமிழ்ப் படவுலகில் பெயர்த் தடுமாற்றங்கள் ஏற்படுவதற்கு நிறையக் காரணங்களிருக்கின்றன. அந்த வரிசையில் இப்பொழுது சண்பகவல்லியில் நடிக்கும் ஏ. என். பெரியநாயகியின் பெயரும் சேருகிறது. இனிமேல் "எந்தப் பெரிய நாயகி?'' என்று கேட்க வேண்டியிருக்கும்.

* * *

"தியாகராஜ பாகவதர் சங்கீத உபன்னியாசம் செய்கிறார்'' என்றால் அதைக் கேட்க அன்றைய தினம் ரேடியோவை யாரேனும் திருப்பாமலிருப்பார்களா? அப்படித் திருப்பினபின் பாகவதர் குரலாயில்லா திருந்தால் அவர்களெல்லாம் பெரிய ஏமாற்றம் அடைவார்கள். ஏனென்றால், உபன்னியாசம் செய்பவரோ எல். தியாகராஜ பாகவதர். எம். கே. டி. பாகவதரல்ல. "அடடா! முன்பே நான்வானொலியை உற்றுக் கவனித்துப் படிக்காமல் போய் விட்டேனே'' யென்று பலர் தலையில் குட்டிக் கொள்ளுவதைப் பாருங்கள்!

* * *

சமீபத்தில் சென்னையில் "பாரடைஸ்'' என்ற ஒரு தியேட்டரைக் கட்டுவதற்கு அஸ்திவாரக்கல் நாட்டப் பட்டது. இதைப் பற்றி என் நடிக நண்பரொருவரிடம்பேச்சை ஆரம்பித்ததுமே சட்டென்று, "பாரடைஸா; என்னை அதில் புக் பண்ணிவிடுங்களேன்'' என்று கேட்டார். பாவம், அவர் நினைத்துக் கொண்டது "பாரடைஸ் பிக்சர்ஸ்'' நான் குறிப்பிட்டதென்னவோ பாரடைஸ் தியேட்டரை!

சிறு கதை

கனவில் கண்ட கன்னிகை

எஸ். கிருஷ்ணமூர்த்தி

என்றும் போலில்லாமல் நான் அன்று ஏனோ சீக்கிரம் படுத்துக் கொண்டேன். வழக்கத்திற்கு மாருக தூக்கத்தை விட்டு சிந்தனையில் இறங்கினேன்.........மேகம் போல் ஒரு படலம் என் கண்ணை மறைத்தது.

"நான் யார்?" என்று ஒரு குரல் எழுந்ததும் திரும்பிப் பார்த்தேன். ஒரு பெண் உருவம் முன்னல் நின்றது. அவ்வுருவம் இக் கேள்வியையே மீண்டும் கேட்டு, "இதற்கு நீங்கள் பதில் கூற முடியுமா?" என்றது. நான் சும்மா இருந்தேன். மேலும் அவ்வுருவம், "எப்படி முடியும்! பாமர மக்கள் நிறைந்த இவ்வுலகில், கலை என்னும் சமுத்திரத்தில் காதல் வலை வீசி, அதிலகப் பட்ட கன்னியர்களை தன் காதற் தீக் கிரையாக்கி, கடைசியில் அவர்களை நிர்கதிக் காளாக்கும், துர்ப்புத்தியுடைய வஞ்சகர்களை அடக்கி ஒடுக்கும் வரையில் என்னைப் போன்ற பேதைப் பெண்களின் கேள்விக்கு நீங்கள் பதில் கூற முடியாது தான்" என்றது.

நான் திகைப் புற்று முற்றும் திரும்பிப் பார்த்தேன். ஆனல் பேச் செழவில்லை. அவ்வுருவம் மேலும் தொடர்ந்து கூறியது; "சோழ நாட்டிலே சிறப் புற்று விளங்கும் தஞ்சை ஜில்லாவில் பிறந்து, வளர்ந்து, என் துர்பாக்கியை வசத்தினல், தாய், தந்தையை இழந்து, அதன்பின் என் அத்தை வீட்டில் அடைக்கலம் புகுந்தேன். பெரிய பாகவதரான என் அத்தை புருஷன், பெயருக் கேற்ப, பெரும் பொருளையும் திரட்டி வந்தார். நான் அவர் அகம் புகுந்ததும், என் அதிர்ஷ்டம் அவரையும் பற்றிக் கொண்டது. என்ன செய்வார்—தனக் குரிய நான்கு குழந்தைகளுடன், என்னையும் ஐந்தாம் குழந்தையாக வளர்க்கும் பொறுப்பு, அவர்கள் தலையில் விழுந்ததால், அவர்களுக்குரிய ,உரிமையுடன் என்னை 'தோசி' யென்றும் 'துடைத்தவள்' என்றும் சொல்லி, அவர்களது, அச் சமய கஷ்ட நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொள்ளுவார்கள்.

"இந்த நிலையில் தங்கள் படத்திற்கு புதிய நடிகர்களைத் தேடிக் கொண்டு ஒரு படக் கோஷ்டி எங்கள் ஊருக்கு வந்தது. கோஷ்டியின் தலைவரான பட முதலாளி, எங்கள் வீட்டிற்கு வந்து, இயற்கை அழகும் இனிய குரலும் பொருந்திய என்னை தம் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார். என் அத்தை புருஷன் விருப்பப் படியும், கட்டளைப் படியும், நானும் அவரும் ஒருநாள் சென்னைக்கு பிரயாணமானோம்.

"சென்னையில் எங்களை வரவேற்க (ஏன்! என்னை மட்டும் வரவேற்க!) பட முதலாளியும், பட டைரெக்டரும் தங்கள் கார்களுடன் காத்திருந்தனர். என் அழகும், மங்கைப் பருவமும் தான் இதற்குக் காரணம் என்று சொல்லவும் வேண்டுமா?

"காலச் சுழல் என்னை உருட்டியது. கலை உலகில் பிரவேசித்த நான் எளிதில் பிரபல மடைந்து விட்டேன். என்னை கண்டவர்களின் கண்கள் கூசும்படி சகல விதமான சம்பத்துடன் கூடிய நக்ஷத்திரப் பதவியையும் அடைந்தேன்.

பிறகு பட முதலாளிகள் தம் மளவில் மட்டும், பெரும் பணத்தை திரட்டிக் கொண்டு என்னை கை விட முற்பட்டனர். என் கை உலர ஆரம்பித்தது. நாளடைவில் புகழ் மங்கி

எனது நக்ஷத்திர பதவியையும் இழக்க நேர்ந்தது இதற்கும் காரணம் அதே பட முதலாளியும்,டைரெக்டரும்தான். அவர்கள் வசம் அகப்பட்ட என்னைத் தம் இச்சைகளுக்கு ஆளாக்கி முடிவில் வியாதி யுற்ற போது என்னைக் கை விட்டனர். உற்றார் உறவினர்கள் இல்லாத என்னை உள்ளன்புடன் உபசரிப்பார் யார்? பால் சுரக்கும் மாட்டை, அதன் கன்றைக் கூட ஊட்ட விடாமல், ஒட்டக்கறக்கும் கயவர்களைப் போல், என் வளர்ப்புப் பெற்றோர்கள் நான் ஏராளமாய் சம்பாதித்துக் கொண்டிருந்தபோது என்னிட முள்ள பொருள்களை யெல்லாம் வாரி, வாரிச் சென்றனர். "அவர்களது தரித்திரத்தை ஒழிக்க வந்த மஹாராசி" என்றும் அப்பொழுது என்னைப் பாராட்டினார்கள். ஆனால் இப்பொழுதோ என் கை ஒடுங்கி விட்டதால் அவர்கள் எட்டிக் கூடப் பார்ப்பதில்லை. தேக அசௌக்கியத்தை குணப்படுத்திக் கொள்ளுவதற்காகப் பலருடைய உதவியை நாடினேன். பயனென்ன? பண உதவிக்குப் பதில் "சினிமாக்காரி," "விபசாரி" என்ற வசை மொழிகள்தான் கிடைத்தன. அவர்களது வசைக்குப் பயந்து அவர்கள் முன் நிற்கவும் அஞ்சினேன்.

"என்ன சொல்லி என்ன பயன்? நான் தெருத் தெருவாக அலைந்தேன். ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியின்றி உடல் நலம் குன்றிப் போய், பிச்சை யெடுத்துப் பிழைக்க, முற்பட்டேன். "சினிமா ஸ்டார்" என்று என் தரிசனத்திற்காகக் காத்திருந்த அதே பொது மக்கள் இன்று என்னைப் "பிச்சக்காரி" என்று விரட்டுகிறது. கலையெனும் சமுத்திரத்தில் மிதந்து, காமப் பேய் என்ற அலையினால் மோதப் பட்டு, பணம், அந்தஸ்து எனும் திட்டுகளில் ஒதுங்கி, கடைசியில் நோய் எனும் திமிங்கிலத்தின் வாயிலகப் பட்டுத் தவிக்கும் பெண்மணிகள் இன்னும் எத்தனை பேர்களோ? இதற்கெல்லாம் காரணம் யார்? சினிமாக் கலையா? பட முதலாளிகளா? அல்லது பட டைரெக்டர்களா?

"நீ ஒரு வாலிபன். எழுந்திரு. இன்றுமா உறக்கம்! இப்பேதைப் பெண்களின் கதையைக் கேட்டும் உறங்குவது சரியா! நான் யார்? என்று இப்பொழுதாவது தெரிந்ததா?

* * *

திடுக்கிட்டு எழுந்தேன். ஆம், கனவு தான்! ஆனால் அது தற்கால சினிமா உலக நிலைமையைப் படம் பிடித்துக் காட்டியது போலிருந்ததற்காகப் பெருமூச்சு விட்டேன்.

KAREEM WATCH COMPANY

(Guarantee Repairers, Dealers, General Merchants and Commission Agents)

— புதிதாய் வந்துள்ளன —

கிராமபோன் ஸ்பேர் பார்ட்ஸ், புதிய வாட்சுகள், புதிய பவுண்டன் பேனாக்கள், மற்றும் பான்ஸி சாமான்கள், இவை விலை சரஸமாயும், உத்திரவாதமுடனும் கிடைக்கும்.

காட்சி சாலை :

53, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை.

பொதுஜனம் பேசுகிறார்

அநியாயம்

கடலூரிலுள்ள ஒரு தியேட்டரில் 1-1-48 முதல் டிக்கெட் கட்டணத்தைஉயர்த்தி விட்டார்கள். முன்பு கட்டணங்கள் வரியுள்பட 0-2-3; 0-6-0; 0-12-0; 1-0-0 ஆக இருந்தது. அவைகளை இப்போது முறையே 0-3-0, 0-7-6, 0-14-0, 1-4-0 ஆக மாற்றி விட்டார்கள். இவ்வாறு கட்டண உயர்வுக்கு தமாஷாவரி உயர்வே காரணம் எனவும் சிலேடு போட்டுக் காண்பிக்கின்றனர்.

உண்மையாக, தமாஷாவரி உயர்வின் காரணமாக கட்டணத்தை உயர்த்துவதானால் முன்பு இருந்த கட்டணங்களில் வரி நீங்கலாக உள்ள பணத்தில் தரைக்கு 20 சதவிகிதமும், மற்றவைகளுக்கு 25 சதவிகிதமுமே அதிகம் சேர்த்து டிக்கெட் கட்டணத்தை மாற்றியிருக்க வேண்டும். அதைவிட்டு இவ்வளவு அதிகமாக கட்டணத்தை உயர்த்தக் காரணம் என்ன?

இப்போது ஏற்படுத்தியுள்ள கட்டணத்தில் வரி நீங்கலாக கிடைக்கும் நிகர வருமானம் முன்பு வரியுள்பட இருந்த கட்டணத்திற்கு (0-12-0 டிக்கெட்டைத் தவிர) குறையாது உள்ளது. அதாவது இப்போது இவர்களுக்கு கிடைக்கும் நிகர வருமானம் முறையே 0-2-6, 0-6-0, 0-11-0, 1-0-0.

தமாஷா வரியைச் சாக்காகக் காட்டி கட்டணங்களை அளவுக்குமிறி உயர்த்தி ஜனங்களைச் சுரண்டுவது மிகுந்த அநியாயமாகும்.

—எஸ். எஸ் சுந்தரம்.
கடலூர்.

பாட்டுப் புஸ்தகங்கள்

எட்டு அல்லது பத்து பக்கங்கள் கொண்ட தமிழ்ப்பட பாட்டுப் புஸ்தகங்கள் ஒன்றரை அணாவிலிருந்து இரண்டணா வரையில் விற்கப்படுகின்றன. இதுவே அதிகம். அப்படியிருக்க தியேட்டர்களில் இவைகளை அதைவிட அதிக விலைக்கு விற்கின்றனர். இதுதான் போகட்டும். என்றால் இப்புஸ்தகங்களில் வெளியிடப்பட்டு வரும் கதைச் சுருக்கங்கள் பாதியில், மென்னியைத் திருகுவது போல முடிவடைகின்றன. இதனால் நமக்கு ஏற்படும் ஏமாற்றம் கொஞ்சநஞ்சமல்ல. ஆகையால் இனிமேலாவது பட விநியோகஸ்தர்கள் கதைச் சுருக்கங்களை முழுதாக பிரசுரிக்க வேண்டுகிறேன்.

இன்னொரு முக்கிய விஷயம். பாட்டுகளின் மெட்டுகளும், தாளங்களும் சில பாட்டு புஸ்தங்களில் பிரசுரிக்கப்படுவதில்லை. அவைகளும் அவசியம் அச்சிடப்படவேண்டும். இதைக் கவனிப்பார்களா?

—சா. வை. நாதன்,
கும்பகோணம்.

குறைகள் நீங்குமா?

விழுப்புரத்தில் "சிதாராம் டாகிஸ்" என்னும் தியேட்டர் நல்ல, அருமையான முறையில் அதிக வசதிகளுடன் கட்டப்பட்டு நடந்து வருகிறது. ஆனால், "ராமராஜ்யம்" படம் காண்பித்த பொழுது திரையில் ஒரு பாதியில் ஒரே வெளுப்பாகவும், மற்றொரு பாதி மங்கலாகவுமிருந்தது. படம் சில இடங்களில் உதறுகிறது. கொஞ்சம் எதிரொலியும் கேட்கிறது. ஆதலால் நல்ல கட்டங்கள் நடக்கும்பொழுது ஒரே வெளுப்பாக இருப்பதால் திரையைப் பார்ப்பதற்கே கண்கள் கூசுகின்றன. இவ்விதமிருப்பதால் கண்கள் கெடுவதுடன், மக்களுக்கு அருவருப்பும், படத்திற்குக் கெட்ட பெயரும் கிடைக்கின்றன. இவைகளை சீர்திருத்தி விட்டால் இந்தத் தியேட்டருக்கு நன்மதிப்பும் படத்திற்கு நல்ல பெயரும் கிடைக்கும்.

—பி. ஸ்ரீநிவாஸன்,
விழுப்புரம்.

விளம்பர ஜாலம்

மதுரையில் உள்ள சில சினிமா தியேட்டர்களில் அடிக்கடி ஹிந்தி, ஆங்கில சண்டைப் படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. இத் தியேட்டர்காரர்கள் புதிதாக இப்படங்களை தங்கள் தியேட்டர்களில் வெளியிடும்போது. "மதி

ரைக்கு இதுவே முதல் தடவை'' என விளம்பரம் செய்வது போற்றக் கூடிய வழக்கமே.

சில மாதங்கள் சென்றபின், இதே தியேட்டர்காரர்கள் தாங்கள் முன்பு காண்பித்த அதே படங்களை, மறுபடியும் தங்கள் தியேட்டர்களில் வெளியிடுவார்கள். இப்படி இரண்டாம் முறையோ மூன்றும் முறையோ வெளியிடும் போது படத்தின் பழைய பெயரை மாற்றிப் புதுப் பெயருடன் வெளியிடுவார்கள். அது மட்டுமா? ''இதுவே மதுரைக்கு முதல் தடவை'' என்ற வாக்கியத்தையும் சேர்த்து விளம்பரம் செய்வார்கள். பாமர மக்களிடமிருந்து பணத்தை கிரஹிக்க மேற்படித் தியேட்டர்காரர்கள் இந்த உபாயத்தைக் கையாளுகின்றனர்.

முக்கியமாக ஹிந்தி, ஆங்கிலப் படங்கள் விஷயத்தில்தான் இதுபோன்ற ஜாலங்களெல்லாம் நடக்கின்றன; அதனால்தான் ஜனங்களும் ஏமாறுகிறார்கள். புதுப் படம் என்று நம்பிச் சென்று பழைய படத்தையே பார்க்கும் போது ஜனங்களுக்குச் கோபம் வரத்தானே செய்யும்? நாளடைவில் அவர்கள் இத் தியேட்டருக்குப் போவதையே நிறுத்திக் கொள்கிறார்கள். கொஞ்சகாலத்திற்குப் பிறகு உண்மையிலேயே ஒரு புதுப்படம் வரும்போது, ''மதுரையில் இதுவே முதல் தடவை'' என்று விளம்பரம் செய்தால் அதை யார்தான் நம்புவர்? ''புலி வருகிறது'' என்று ஏமாற்றிய இடையன் கதை போலாகி விடுகிறது, தியேட்டர் காரர் ஜனங்களை எந்த விதத்திலும் ஏமாற்ற முயலக் கூடாது. இல்லையேல் அது அவர்களுக்கே தீமையாய் முடியும்.

—மு. ராமசாமி,
மதுரை.

இரவல் குரல்

இப்பொழுது தமிழ் நாட்டில் தமிழ்ப் படங்களில் நடிக, நடிகைகளுக்கு குரல் இரவல் கொடுப்பது அதிகமாயிருக்கிறது. இதனால் பல சிக்கல்கள் உண்டாகின்றன. படத்தில் நடிக்கும் நடிகருக்கோ, நடிகைக்கோ இரவல் குரல் தருபவர்களின் சங்கீத மேன்மை தெரியாமல் போகிறது. தவிர, பொது ஜனங்களிடையே இதுபற்றி சர்ச்சை வேறு கிளம்பி விடுகிறது. ஆகையால் இவ்வழக்கத்திற்கு ஒரு முடிவு வேண்டும். சினிமாப் படம் தயாரிப்பவர்கள். குரல் இரவல் கொடுப்பவர்களின் பெயரையும் இன்னாருக்காக இன்னார் குரல் இரவல் கொடுத்திருக்கிறார் என்பதையும் விளம்பரம்செய்யவேண்டும். அல்லது நடிப்பும், பாடும் திறமையும் ஒருங்கே கூடியவர்களை இனி நடிக்கச் செய்ய வேண்டும்.

—''கம்பன்''
கோயமுத்தூர்.

அவமானம்!

தியேட்டர்களில் டிக்கெட் வாங்குவது லேசான காரியமல்ல. ஒரு மணி நேரம் முன்னதாகவே செல்லவேண்டும். படம் பார்க்க வருபவர்கள் ஒழுங்காக வரிசையாய் நின்று டிக்கெட் வாங்குவதில்லை. தியேட்டரினுள் சென்றவுடன் கோஷமிடுகிறார்கள். கண்ட இடத்தில் எச்சிலைத் துப்புகிறார்கள். படம் ஓடும்போது பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் இதே நபர்கள் ஆங்கிலப் படத் தியேட்டர்களுக்குப் போகும்போது கப் சிப் என்று இருக்கிறார்கள். எச்சில் துப்புவதில்லை. வரிசையாக நின்றும் டிக்கெட் வாங்குகிறார்கள், இந்த மாறுதல் என்? தமிழ்ப் படத் தியேட்டர் இவர்களை என்ன செய்தது? அல்லது தமிழ்ப் படம்தான் என்ன செய்தது? பார்க்கப் போனால் தமிழர்களாகிய நாம் தமிழ்ப் படத் தியேட்டர்களுக்குத்தானே அதிக மதிப்பளிக்க வேண்டும். தமிழ்ப் படங்களுக்குத்தானே அதிக ஆதரவு காட்ட வேண்டும். இது ஏன் சிலருக்குப் புரிவதில்லை?

—ப. ந. கணபதி,
சென்னை

எல்லை மீறிய ஆபாசம்

சில தினங்களுக்கு முன் ''ராஜ குமாரி' படத்தைப் பார்த்தேன். அதில் தவமணி தேவியின் தோற்றம் எல்லைமீறிய ஆபாசமாய் இருக்கிறது. இப்படத்தைப் பார்த்த பின் தவமணி தேவிக்கு ஒரு வேளை ஆடையே அணியத் தெரியாதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இவர் காமத்தைக் கிளறி விடும்படியாக தோற்றமளிக்கிறார். இதை சில ஆண்

*பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

எஸ். எஸ். சுந்தரம்,

8, ஓய். எம். ஸி. ஏ. பில்டிங்ஸ்,

கடலூர் என். டி.

ரஸிகர்கள் மிக ரஸிக்கக்கூடும். ஆனல் பெண் ரஸிகர்களிடையே இவரது செய்கை வெறுப்பையும், அவமானத்தையும் ஏற்படுத்துகிறது. இவர் எதற்காக தம் மானத்தை உதறித் தள்ளிவிட்டு நடிக்க வேண்டும்? இவ்விதம் நடித்தால்தான் புகழ் கிடைக்கும் என்று இவர் எண்ணுகிருர் போலும். ஆனல் அவர் சொல்லலாம்: "என் தோற்றம் காமத்தை கிளறிவிடுகிறது என்கிறீர்களே. கோவில்களில் உள்ள கற்சிலைகளைப் பார்க்கும் போது மட்டும் உங்களுக்கு காமம் அதிகரிக்காதோ?" என்று. என்ன இருந்தாலும் கற்சிலைக்கும் மனிதர்களுக்கும் வித்தியாசமில்லையா? ஆதலால் இனி இது மாதிரியாக ஆபாசமாகத் தோன்றுவதைவிட்டுதவமணி உண்மையாகநடித்துப் புகழ்பெற முயற்சிப்பார் என்று நம்புகிறேன்.

—பி. எஸ். அப்துல் வஹாப்,
திருக்கழுக்குன்றம்.

கடைசி வகுப்பு

எந்தப் படமும் வசூல் விஷயத்தில் வெற்றி காண்பது, கடைசி வகுப்பு வசூலைப் பொறுத்தே இருக்கிறது. பட முதலாளியும், தியேட்டர் சொந்தக்காரரும் தமது பணப்பெட்டி நிரம்பப்பெற கடைசி வகுப்பினரது ஆதரவையே எதிர்பார்க்கிருர்கள். இரண்டரை ரூபாய், ஒன்னரை ரூபாய் டிக்கெட்டுகள் மூலம் அவர்கள் லாபம் சம்பாதிக்கவில்லை.

ஆனல், தியேட்டர்களில், உயர்ந்த வகுப்புக்களில் உள்ள சௌகரியங்களில் பதினறில் ஒரு பங்குகூட கடைசி வகுப்புக்குக் கிடையாது. அநேக கொட்டகைகளில் பெஞ்சுகளுக்கு சாய்மானம்கூட இல்லை.

அடிக்கடி சினிமாப் பார்ப்பதால் கண்களுக்கு கெடுதல் என்று சொல்லுகிருர்கள். திரைக்கு வெகு சமீபத்திலிருந்து படம் பார்ப்பது இன்னும் கெடுதல் என்றும் சொல்கிருர்கள். உயர்ந்த வகுப்புகள் திரையை விட்டு தூரத்தில் இருக்கின்றன. ஆனல் ஏழையின் கடைசி வகுப்பு மட்டும் திரைக்கு மிக மிகச் சமீபத்தில் இருக்கிறது. பணம் அதிகம் கொடுக்க வசதியுள்ளவர்களின் கண்களைப் பாதுகாக்க சௌகரியம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனல், ஏழைகளின் கண்கள் மட்டும்தான் பாதிக்கப் படுகிறது. இதுதான் இன்று தியேட்டர்களிலுள்ள மோசமான அமைப்பு.

எனவே, கடைசி வகுப்பானது திரையிலிருந்து குறைந்தது இவ்வளவு தூரத்திலாவது இருக்க வேண்டும். என்று விதி ஏற்படுத்தவேண்டும்.

—ராம்,
வத்தலக்குண்டு.

ஒழியட்டும், ஆபாசம்

முதன் முதலில் சினிமாக்கள் பரவ ஆரம்பித்தபோது அவைகளில் கலை நுணுக்கம், நடிப்பு முதலிய விஷயங்கள் மட்டமாயிருந்தனவே தவிர தற்காலத்திய படங்களிலுள்ளது போல் ஆபாசம் தலை விரித்தாடியது கிடையாது. தற்காலத்திய படங்கள் கலை நுணுக்கம், நடிப்பு முதலிய விஷயங்களிலாவது முன்னேற்றம் அடைந்திருக்கின்றனவா என்று பார்த்தால், அப்படியொன்றும் பிரமாதமான முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் காணும். ஆனல் நடிகைகளின் திறந்த மார்புகளை எப்படி அண்மைக் காட்சியில் காட்டுவது என்கிற விஷயத்தை மாத்திரம் எல்லாப் பட முதலாளிகளும் நன்கு தெரிந்து கொண்டிருக்கிருர்கள்.

நடிகைகள்தான் நம் படங்களின் ஆபாசத்துக்குக் காரணம் என நான் நினைக்கிறேன். ஆனல் அவர்களைக் கேட்டாலோ டைரெக்டரின் தூண்டுதலின் பேரிலும், படமுதலாளியின் வற்புறுத்தலின் பேரிலுமே இவ்விதம் நடிப்பதாகச் சொல்லுகிருர்கள். இது ஒரு அர்த்தமற்ற சமாதானம்.

நடிகைகள் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு வைத்துக் கொண்டு, ஆபாசமாக நடிக்கத் தூண்டும் படமுதலாளிகளின் படங்களில் நடிக்க மறுத்து விட்டால் அவர்கள் வழிக்கு வந்து விடுவார்களல்லவா?

தணிக்கை போர்டார் ஆபாசமான படங்களைக் காட்ட அனுமதி மறுத்துவிட வேண்டும். தற்போதுள்ள தணிக்கை போர்டார் சுறு சுறுப்பாக வேலை செய்து வருவது சந்தோஷிக்கத் தக்க விஷயமே. ஆனல் சில படங்களிலுள்ள ஆபாசத்தைப் பார்க்கும்போது, அவர்கள் சில சமயம் தூங்குகிருர்களோ, என்ற சந்தேகம் ஏற்படுகிறது. தணிக்கை போர்ட்டார் எந்தப் பட முதலாளிக்கும் சலுகை காட்டக்கூடாது. அவர்கள் ஆபாசத்தை ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

—எம். என். வெங்கடராமன்,
மதுரை.

மேனாட்டு தியேட்டர்கள்

கே. எஸ். குமார்

சமீபத்தில் நான் சில நண்பர்களுடன் எகிப்து, பாலஸ்தீனம், ஸைப்ரஸ், ஸிரியா, ரோட்ஸ் முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அங்கு சென்றதும் அங்கு படங்கள், தியேட்டர்கள், ஸ்டிடுயோக்கள் முதலியவை, நம் நாட்டைவிடச் சிறந்து விளங்குவதற்கு என்ன காரணம் என்பதை அறிய ஆவல் கொண்டது என் மனம். ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை வாங்கிப் புரட்டினேன். சமீபத்தில் இருந்த தியேட்டர் ஒன்றில் அன்றுதான் ஒரு கிரிக் படம் ஆரம்பமாகிறது என்பதை அறிந்து கொண்டேன். எனது நண்பர்களிடம் தெரிவித்ததும் அவர்களும் வருவதாக ஒப்புக்கொண்டனர்.

சென்னையில் ஒரு புதுப் படத்தின் ஆரம்பதினம் என்றால் மாலை ஆறு மணி ஆட்டத்திற்கு பிற்பகல் இரண்டு மணிக்கே "க்யூ" வரிசை ஆரம்பமாகிவிடுமே! மேலும் மேனாடாகிய இங்கே 'க்யூ' மிகவும் சிரத்தையாக கவனிக்கப்படுமாதலால், சீக்கிரமேபுறப்பட வேண்டும்"என்று எண்ணிக் கொண்டேன். ஆகாயத்தை கருமேகங்கள் எங்கிருந்தோ வந்து திடீரென்று மூடிக்கொண்டன. மழை பெய்வதற்குண்டான அறிகுறிகளும் தென்பட்டன. எனது நண்பர்களை சீக்கிரம் புறப்படும்படி தொந்தரவு செய்தேன். ஆனால் அவர்கள் கிளம்பியபாடில்லை. மழை "சோ"வென்று கொட்ட ஆரம்பித்தது. "சரி நாம் இன்று சினிமா பார்த்த மாதிரிதான்" என்று அலுத்துப்போனேன்.

இரண்டு மணிக்குத் தொடங்கிய அந்த மழை ஐந்து மணிக்குத்தான் நின்றது. எல்லோரும் புறப்பட்டோம். என் மனம் என்னமோ, 'டிக்கெட், கிடைக்காது விடு திரும்புவோம்' என்று சொல்லிக் கொண்டிருந்தது. தியேட்டரை அடைந்ததும் நான் நினைத்தது சரியாகி விட்டது என்று நினைத்தேன். ஏனெனில் தியேட்டர் வாயிலில் ஒருவரையும் காணோம். "கிரிக் தியேட்டர்" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மெர்குரி விளக்குகளின் பிரகாசமும், முன் ஹாலில் போடப்பட்டிருந்த சில வர்ண விளக்குகளின் பிரகாசமும் கண்களைப் பறித்து விடும் போலிருந்தன.

வகுப்புவாரியாக டிக்கெட்டுகள் கொடுக்கும் இடங்கள் திறந்துதானிருந்தன என்றாலும், அங்கே பெண்கள் டிக்கெட் கொடுப்பதற்காக உட்கார்ந்திருந்தமையால், சந்தேகித்து, 'ஆண்களுக்கு டிக்கெட்டுகள் கொடுக்குமிடம் எது' என்று சுற்றுமுற்றும் பார்க்கலானோம். ஏதோ காரியமாக வெளியே வந்த அத் தியேட்டரின் மானேஜர் எங்களைப் பார்த்து ஆங்கிலத்தில், "ஏன் நீங்கள் டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு உள்ளே போகலாமே" என்றார். எனது நண்பர்கள் திருதிரு வென்று விழித்தனர். நான் மட்டும் சமாளித்துக்கொண்டு, "எங்கள் நண்பர் ஒருவருக்காக காத்துக் கொண்டிருக்கிறோம்" என்று பதிலளித்தேன். "சரி" என்று மானேஜர் சொல்லி உள்ளே சென்றதும், ஆண்களுக்குக்கூட டிக்கெட்டுகள் கொடுக்க பெண்களையே நியமித்திருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொண்டு, ஒருவருக்கு எட்டு பியாஸ்டர்கள் வீதம் (ரூபா 3-6-0) கொடுத்து மூன்று டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு உள்ளே சென்றோம்.

தியேட்டர் காலியாயிருந்தது. நாங்கள்தான் முதல் ஆசாமிகள். எங்களை

இந்த அழகிய மாளிகை எந்த லக்ஷாதிபதியினுடையதோ என்று நினைக்கிறீர்களோ? இது குடியிருக்கும் மாளிகை அல்ல. லக்ஷக் கணக்கான ஜனங்களின் சௌகரியத்திற்காக பாலஸ்தீனத்தில் அமைந்துள்ள ஒரு சினிமாத் தியேட்டர் இது.

வரவேற்பவர்போல் வந்த ஒரு ஆசாமி, "டிக்கெட்" என்றார். டிக்கெட்டுகளை வாங்கிப் பார்த்துக் கொண்டே, குறிப்பிட்ட ஆசனத்தின் அருகே சென்று "இங்கே உட்காருங்கள்" என்றார். டிக்கெட்டுகளின்மேல் குறிப்பிட்டிருந்த நம்பர்கள், அந்த குறிப்பிட்ட ஆசனங்களின் பின் பாகத்திலும் எழுதப்பட்டிருந்தது.

எனக்கு உடனே பம்பாய், கல்கத்தா, டில்லி, முதலிய இடங்களின் நினைவு வந்தது. இந்த இடங்களிலும், சில தியேட்டர்களில் இம்மாதிரி விதியை அனுசரிக்கின்றனர். நாம் டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு போய் ஏதேனும் நம் சொந்த அலுவல்களை கவனித்துக் கொண்டு தாமதித்து வந்தாலும் நமக்குக் குறிப்பிட்ட இடம் காலியாகவே இருக்கும். அதுபோல் அங்கும் இருந்ததைப் பற்றி மகிழ்ச்சி யடைந்தேன். இது போன்ற வழக்கம் நம் சென்னையிலும் ஏற்படவில்லையே என்பதுபற்றி வருத்தமும் அடைந்தேன்.

மணி ஆறடித்ததும், ஒருவர் பின் ஒருவராக உள்ளே வந்து கொண்டிருந்தனர் எனது நண்பர்களுள் ஒருவர் "படம் சொத்தைப் படமோ என்னவோ" கூட்டத்தையே காணோமே என்றார். மற்றொருவர், "இந்த பைத்தியத்துடன் நாமும் சேர்ந்தோம் அல்லவா? நாமும் பைத்தியந் தான்" என்றார். எனக்கு அவர்கள் சொன்னது ஒன்றும் காதில் விழவில்லை. எனது மனம் அந்தத் தியேட்டரின் அமைப்பை ஆராய ஆரம்பித்தது.

அந்தத் தியேட்டர் சீதோஷ்ண மாறுதல் ஏற்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. பெஞ்சுகள் வகுப்போ, அல்லது தரைவகுப்போ, அங்கு காணப்படவில்லை. நமது நாட்டைப் போலவே "தீ" விபத்தை தவிப்பதற்கான கருவிகளும் அமைக்கப்பட்டிருந்தன. பிறைச் சந்திர வடிவத்தில் நாற்காலிகளும் சோபாக்களும் போடப்பட்டிருந்தன. முதல் வகுப்பும், ரிசர்வ் வகுப்பும், தியேட்டரின் மாடிப் பகுதியிலமைந்திருந்தது. "Box" என்ற ஒரு வகுப்பு இரண்டு நபர்கள் உட்காரக் கூடியதாயும், ஒரு சிறிய அறைபோல் மூன்று பக்கங்களில் தடுத்தும், மின்சார விசிறி முதலியவைகளோடும், மாடியில் இருந்தன. இதுபோல பல அறைகளை அமைத்திருந்தனர். அங்கேயே ஓர் பாகத்தில் திரை அமைத்து "கோஷாஸ்" என்ற ஒரு போர்டும் மாட்டப்பட்டிருந்தது. இதுபோல்

கம் நாடுகளிலும் சில இடங்களில் பார்த்திருக்கிறேன். இத்திரை மின்சார சக்தியினலேயே படம் ஆரம்பமானதும் திறந்து கொள்ளவும், படம் முடியும்போது மூடிக்கொள்ளவும் ஏற்படுத்தியுள்ளனர். பெண்களுக்கென்று கீழ்த்தர வகுப்புகளில் பிரத்தியேக இடவசதிகள் ஒன்றும் காணப்படவில்லை.

ரிகார்டுகளின் பாட்டுச் சத்தத்தைக் கேட்டவுடன்தான் நான் சுய அறிவுக்கு வந்தேன். தியேட்டரினுள் ஜனம் நிரம்பியிருந்தது. அத்துடன் அமைதியும் நிலவியிருந்தது. என் பக்கத்தில் ஆங்கிலேய உடைதரித்த எகிப்திய மாது ஒருத்தி தனியே உட்கார்ந்திருந்ததை அப்பொழுதுதான் பார்த்தேன். எனக்கு என்னவோ சங்கோசமாகத்தானிருந்தது. அவளுக்குக் குறிப்பிட்ட நம்பர் அங்கே போலும் என்று எண்ணினேன்.

கிரீக் தியேட்டரில் வழங்கப்படும் ஒரு மாதிரி டிக்கெட் அதில். தமாஷா வரிக்காக ஸ்டாம்ப் ஒட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

மறுகணம் என் மனம் சென்னை தியேட்டர்களை அடைந்தது. ஏன் சாதாரணமாக நம் நாட்டிலேயே ஒரு புதுப் படத்தின் ஆரம்ப தினம் என்றால், எவ்வளவு கூட்டம். கோடை வெய்யிலானாலும், கொட்டும் மழையானாலும், ஒரு மூலையிலிருந்து, மற்றொரு மூலைவரை எறும்பு சாரிபோல் நீண்டு நிற்கும் "க்யூ"வில் நின்றுகொண்டும், அதிலும் சரிவர நிற்காமல் "நான் நீ" என்று போட்டா போட்டி போட்டுக்கொண்டு சண்டை சச்சரவுகள் ஏற்படும். போலீஸ் தடியடி பிரயோகங்களும் கிடைக்கும். கூட்டத்தில் அவதிப்பட்டுக் கொண்டு உள்ளே செல்வோம். உடம்பில் வியர்வை சொட்டச் சொட்ட ஒருவர் மேல் ஒருவர் உராய்ந்துகொண்டு உட்கார்ந்திருப்போம். டீ, சிகரெட் சுருட்டு முதலிய புகைகள் மூச்சுத் திணற அடிக்கும். இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் படத்தைப் பார்க்கும் போதும் நம்மில் சிலர் "புதிய படத்தை முதல் நாள், முதல் காக்ஷி, நான் பார்த்தேன்" என்று வீரியம் பேசி பெருமை யடித்துக் கொள்வதை நான் நினைத்து ஒரு பெருமூச்சு விட்டேன்.

சிறிது நேரத்தில் படமும் ஆரம்பமாகியது. அதில் பேசப்படும் ஒவ்வொரு சம்பாஷணையையும், படத்தின் கீழ் பாகத்தில், ஆங்கில பாஷையிலும், அராபிய பாஷையிலும் காட்டப்பட்டது. இதற்குக் காரணம் யாதென விசாரித்ததில், அந்நாட்டில் சாதாரணமாக வழங்கும் பாஷையைத் தவிர வேறு பாஷைப் படங்கள் காட்டப்படுமேயானால், அந்நாட்டு மக்களுக்கு பொதுவான இரண்டு பாஷைகளில் இவ்விதம் காட்டுவது வழக்கமாம். இதனால் ஜனங்கள் படத்தில் நடக்கும் ஒவ்வொரு அம்சத்தையும் எளிதில் புரிந்து கொள்ள அனுகூலமாகிறது.

தியேட்டரில் படம் பார்ப்பது போலவே எனக்குத் தோன்றவில்லை. அவ்வளவு அமைதி தியேட்டரினுள் குடிகொண்டிருந்தது. பெரும்பாலும் நம் நாட்டிலுள்ள சில தியேட்டர்களில் "டீ, சிகரெட்" "டீ, சிகரெட்" என்ற ஒரு நாதம் படத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை "சுவர்க்கோழி"யின் ஸ்வரம் போல் காதில் விழுந்துகொண்டேயிருக்கும்! அநேகமாக கேட்டுக் கேட்டு நமக்கு

இது சகஜமாகி விட்டது. இப்படிப் பழகியிருக்கும் காதுகளுக்கு ஒருவித இடையூறுமின்றி படம் பார்க்க நேரிட்டதால் ஒரு புதிய உணர்ச்சி தோன்றியதில் வியப்பில்லை யல்லவா? டீ, சிகரெட், குளிர்ந்த பானங்கள் முதலியவற்றை தியேட்டரினுள் விற்க அனுமதிப்பதில்லையாம். அப்படி வேண்டியவர்கள் வெளியே யிருக்கும் 'கேன்டீன்'களுக்குச் சென்று பெற்றுக் கொள்ள வேண்டுமாம். வெற்றிலை பாக்கு என்ற பெயரையே அவர்கள் கேள்விப் பட்டதில்லை யென்ருல், எச்சில் துப்பும் வழக்கம் மட்டும் அவர்களிடம் ஏது? இம்மாதிரி அசுத்தமில்லாததும், தொந்தரவுகள் இல்லாததுமான தியேட்டர்களினுள் சென்று படம் பார்ப்பதால் படத்தின் மூலம் போதிக்கப்படும் கருத்துகளையும், சம்பாஷணைகளையும் நன்கு உணர முடிகின்றது.

அன்று பார்த்த படத்தில் தந்தைக்கும் பிள்ளைக்குமுள்ள மனே வித்தியாசம் வாழ்க்கையை ஒட்டி சித்தரிக்கப் பட்டிருந்தது. பாஷை வேருயினும் எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. படம் பார்த்துக் கொண்டிருக்கும்போது எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அதாவது, எல்லா தியேட்டர்களிலும் இம்மாதிரி சௌகரியங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றதா, அல்லது சில முக்கியமான தியேட்டர்களில் மட்டும்தானு என்று.

படம் முடிந்ததும் மேனேஜரின் அறையினுள் நுழைந்தேன். என்னை நானே அவரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவரும் புன்சிரிப்புடன் பக்கத்தில் இடமளித்தார். நான் "உங்கள் நாட்டு தியேட்டர்களைப்பற்றி சில விவரங்களைக் கேட்டுப் போகலாமென வந்தேன்" என்றேன்.

"ஆகா! கேளுங்களேன் சொல்கிறேன்" என்ருர். "உங்கள் தியேட்டர்களில் அனுசரிக்கும் விதிகளைப் போலவே எல்லாத் தியேட்டர்களிலும் அனுசரிக்கின்றனரா?" என்றேன். "நூற்றுக்கு எழுபத்தி ஐந்து தியேட்டர்கள் இம்மாதிரி விதிகளை அனுசரிப்பவைகளாகும். இம்மாதிரி விதிகளை அனுசரிக்க முடியாவிட்டால் நகர எல்லைக்குள் தியேட்டர் கட்ட சர்க்கார் அனுமதிப்பதில்லை. ஆனல், இம்மாதிரி விதிகளை அனுசரிக்க முடியாதவர்களுக்கு (Open Air Theatres) வெட்ட வெளியில் தியேட்டர் போலமைத்துக் கொள்ள அனுமதி தருகின்றனர்!" என்ருர். இன்னும் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு, நமது இந்தியாவைப் பற்றியும் கொஞ்சம் பெருமையடித்துக்கொண்டவனுய் "எங்கள் நாட்டிலும் பல தியேட்டர்கள் இம்மாதிரி யிருக்கின்றன" என்றேன். அவர் எங்கே இந்தியாவிற்கு வரப் போகிருர் என்ற எண்ணம் என் மனதில் தோன்றி மறைந்தது! மறுபடியும் அவர், "இந் நாட்டில் இன்னும் சில 'லோ கிளாஸ்' தியேட்டர்கள் இருக்கத்தான் செய்கின்றன" என்று அலுத்துக் கொண்டார்.

அவரிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தேன். வெட்ட வெளித் தியேட்டர்களையும் பார்த்துவிடவேண்டுமென ஆவல் ஏற்பட்டது. மறு நாளே அதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வெட்டவெளியில் மேலே கூரையின்றி மூன்று பக்கங்களிலும் பெரிய சுவர்களை எழுப்பி, எதிரே வெள்ளித் திரையை அமைத்து, நாற்காலிகளும் சோபாக்களும் போடப்பட்டிருந்தன. மழை வந்தால் அந்த தியேட்டருக்கு விடுமுறை நாளாம்! ஆனல் அதனுள் நந்த வனத்தைப் போல பலவித பூச்செடிகள் வைத்திருந்தது பார்ப்பதற்கு மனேரம்மியமாக இருந்தது.

அந்நாட்டில் எப்படிப்பட்ட உயர்தரமான படமாயினும் குறிப்பிட்ட வாரங்களுக்கு மேல் காட்ட சர்க்கார் அனுமதிப்பதில்லையாம்.

நம் நாட்டைப் போலவே அங்கும் பல ஸ்டுடியோக்களிருக்கின்றன. ஒவ்வொரு ஸ்டுடியோவிலும் பல்வேறு பாஷைகளில் படங்கள் தயாரிக்கப் படுகின்றன. இவற்றை யெல்லாம் பார்த்துவிட்டு இந்தியா திரும்பினேம்.

யோகம் - மங்களம்

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்று பிறந்தவர் அவர். ஆதலால்தான் அவருக்கு பல கலைகளில் சரஸ்வதியின் கிருபா கடாக்ஷம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் பொருந்தவே செய்யும். அவருக்கு நாட்டியம், நடிப்பு சங்கீதம் இவைகளைத் தவிர சித்திரக் கலையிலும் கொஞ்சம் திறமை உண்டு என்பதை அறிய ஆச்சரியம் அடைந்தேன். பிறகு, தாம் வரைந்த சில சித்திரங்களை எடுத்துக் காட்டினார். திருவனந்தபுரத்திலிருந்து வெளிவரும் "கவிக்குயில்" என்ற பத்திரிகையில் இவருடைய சித்திரங்கள் ஒன்றிரண்டு வெளி வந்திருக்கின்றன. இவைகளையெல்லாம் பார்த்த போது மிகச் சந்தோஷம் அடைந்தேன். மேலும் இத்திறமையை விருத்தி செய்து கொள்ளும்படி அவருக்கு உத்ஸாகமூட்டினேன்.

இவர்களது குடும்பம் கும்பகோணத்தில் தங்கியிருந்த போது யோகம் முதலில் மார்னிங் ஸ்டார் பெண் பாடசாலையிலும், பிறகு நேட்டிவ் ஹைஸ்கூலிலும் சேர்ந்து ஐந்தாவது பாரம் வரை படித்திருக்கிறார். அவருக்குத் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மூன்று பாஷைகளை எழுதப் படிக்கவும், தெலுங்கில் பேசவும் மட்டும் தெரியும்.

"வேதாள உலகம்" படத்தின் மூலம் மங்களம் ரஸிகர்களின் உள்ளங்களை ஊசலாட வைக்கப் போகிறார்.

யோகம் நான்கு அடி பதினொரு அங்குல உயரமும், மாநிறமும் உடையவர். மங்களமோ அவரைவிட இரண்டங்குலம் அதிக உயரமும், சிவந்த மேனியும் உடையவர். லாவண்யமான முகமும், குறுகுறுப்பான கண்களும், கவர்ச்சிகரமான உடலமைப்பும் உடைய மங்களம் நடிப்பு விஷயத்தில் இன்னும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டால் பிரமாதமான பெயரைச் சம்பாதித்துக் கொள்ள முடியும்.

மங்களம் மூன்றாவது பாரத்துடன் தம் படிப்பை நிறுத்தி விட்டார். அவருக்குத் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய பாஷைகளை எழுதப் படிக்கத் தெரியும். ஹிந்தி, மராத்தி ஆகிய பாஷைகளைப் பேசமட்டும் தெரியுமாம். மங்களத்திற்கு இப்பொழுது 19 வயது ஆகிறது. அவர் 1929-ம் வருஷம் ஜூலை மாஸம் பிறந்தவர்.

யோகம் மங்களம் இருவருக்கும் தமிழ் நாட்டிலும், வட இந்தியாவிலும் நல்ல புகழ் இருந்து வருகிறது. அவர்கள் இந்தப் புகழை மங்கவிடாமல் மிகுதிப் படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இருவருக்கும் சுமாராகப் பாடத் தெரியும். ஆனால் அவர்கள் இதுவரையில் ஒரு படத்தில் கூட சொந்தக் குரலில் பாடவில்லை. படத்தில் நாட்டியத்தைப் பார்த்து விட்டு நாட்டியக் கச்சேரிக்கு வந்தது போல் பலர் [illegible] செய்தது போல், படத்தில் பாடுவதைக்

(அடுத்த பக்கம் பார்க்க)

134243

நியூயார்க்கில் "சகுந்தலா"

பிரபல டைரெக்டர் ஸ்ரீ. சாந்தா ராம் தயாரித்த ராஜ்கமலின் "சகுந்தலா" நியூயார்க்கில் சென்ற மாதம் வெளியிடப் பட்டதாம். நல்ல வசூலையும் இப்படம் பெற்றதாம்.

ஆந்திர நாடக கலா பரிக்ஷத்

ஆந்திர நாடக கலா பரிக்ஷத்தின் பதினொன்காவது ஆண்டு விழா பெஜவாடாவில் நடைபெற்றதாம். ராஜ்கமல் கலா மந்திரின் டைரெக்டர் வி சாந்தாராம் இந்த விழாவை ஆரம்பித்து வைத்தாராம். பல அமெச்சூர் கழகங்கள் இவ் விழாவில் பங்கெடுத்துக்கொண்டார்களாம்.

ஆபாசப் போட்டோக்களுக்குத் தடை

மாஸ்கோவில் ஹாலிவுட் சினிமா நக்ஷத்திரங்களின் ஆபாசப் போட்டோக்களை சலூன்களில் விற்பதையும், அவைகளை சுவற்றில் மாட்டி வைப்பதையும் ஒழிக்கும் வகையில் ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

சென்னையில் தடை

பாரமவுண்ட் பிக்சர்ஸார் தயாரித்த "கல்கத்தா" என்ற படத்தை சென்னை மகாணத்தில் எங்கும் திரையிடக் கூடாது என்று சென்னை சர்க்கார் ஒரு தடை உத்திரவைப் பிறப்பித்திருக்கின்றனர்.

படத் தணிக்கை போர்டு

சென்னை படத் தணிக்கை போர்டிற்கு, ஸ்ரீமதிகள் துர்காபாய், மீனும்பாள்சிவராஜ், ஸ்ரீ. நார்லா வெங்டேஸ்வரராவ், ஸ்ரீ. சேஷாசலம் ஆகியவர்கள் அங்கத்தினர்களாகச் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள்.

பொதுவான தணிக்கை போர்டு

"இந்தியப் படங்கள் எல்லாவற்றையும் தணிக்கை செய்ய ஒரு பொதுவான தணிக்கை போர்டு வேண்டும்" என ஒரு தூதுகோஷ்டி இந்திய சினிமாத் தொழில் சார்பில் ஸ்ரீ. சர்தார் படேலை பேட்டி கண்டபோது வற்புறுத்தியது. தவிர, சினிமாத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களையும் குறைகளையும் தெரிவித்தது. சர்க்கார் உதவி செய்ய வேண்டும் எனவும்

கேட்டு விட்டு சங்கீதக் கச்சேரிக்கு வரும்படி தொந்தரவு ஏற்பட்டு விடுமோ என்ற பயம் காரணமாகவோ என்னவோ அவர்கள் இப்பொழுது சங்கீதப் பயிற்சியையும் பெற்று வருகின்றனர்.

விவாஹமாகாத இந்த சகோதரிகள் இருவரும் ஒருவரையொருவர் மிகவும் காதலிக்கின்றனர். சமீப காலம்வரையில் கலை முயற்சிகள் யாவற்றிலும் அவர்கள் சேர்ந்தே ஈடுபட்டு வந்திருக்கின்றனர். ஆனால் ஒன்றிரண்டு வருஷங்களாக மங்களத்தை மட்டும் சினிமா உலகம் அதிகமாய் ஆகர்ஷிக்க ஆரம்பித்திருக்கிறது. தான் தனியாய் நடிக்க நேர்ந்தாலும் தன் தமக்கையின் பெயராவது தன் பெயருடன் கூடவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலோ என்னவோ "யோக மங்களம்" என்று தம் சினிமாப் பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார். லாபத்தைக் கருதும் முதலாளி வர்க்கத்தினர் ஒரு பெயருக்குப் பதில் இரண்டு பெயர் கிடைக்கும் இந்த லாபத்தைப் பயன் படுத்திக் கொண்டதில் ஆச்சரியமில்லை. வெறும் மங்களமாயிருந்த அவருக்கு இனிமேல் சினிமா மூலம் யோகம் அடிக்கப் போகிறதென்பதையே இந்த மாறுதல் குறிப்பிடுவதாக எனக்குத் தோன்றுகிறது.

கோரிற்று. அகதிகள் நிதிக்கு எழு பத்தி மூவாயிரம் ரூபாயை இக் கோஷ்டி ஸ்ரீ. படேலிடம் கொடுத்தது.

தியேட்டர்கள் மூடப்பட்டன.

மஹாத்மா காந்தி அடிகள் அமர ரான அன்று சென்னை நகரத்திலுள்ள சினிமாத் தியேட்டர்களில் காட்சிகள் நடைபெறவில்லை. எல்லாத் தியேட் டர்களும் அனுதாபம் தெரிவிக்கும் முறையில் இரண்டு மூன்று நாட்கள் மூடப்பட்டிருந்தன. மீண்டும் காந்திஜி யின் அஸ்தி கரைக்கப் பட்ட சடங்கு கள் சம்பந்தமாக சென்னைத் தியேட் டர்களெல்லாம் இம்மாஸம் 12ந் தேதி யன்று மூடிவைக்கப் பட்டன.

காந்திஜி பக்த சபா

பொங்கல் தினத்தன்று கனம் மந் திரி சுப்பராயனால் ஆரம்பித்து வைக் கப்பட்ட காந்திஜி பக்த சபையின் 28வது வருஷ ஆண்டு விழாக் கச்சேரி கள் வெகு சிறப்பாக நடைபெற்றன. டி. ஏ. பெரியநாயகி, ஜி. என். டி. வைக்கம் சரஸ்வதி, மதுரை மணி போன்றவர்களுடைய கச்சேரிகளும், யோகம்–மங்களம், குமாரி கமலா, லலிதா-பத்மினி, ராகினி, தாரா சௌத்ரி, கோபிநாத் தங்கமணி ஆகிய வர்களின் நாட்டியக் கச்சேரிகளும் திருப்திகரமாக நடை பெற்றன. காரியதரிசி ஸ்ரீ. டி. எஸ். எம். நாயுடு வின் ஏற்பாடுகள் எல்லாம் நன்ரு யிருந்தன.

அரங்கேற்றம்

லக்ஷ்மி பிரபா, ஆர். பத்மா, இவர்க ளின் சகோதரிகளான சரோஜா, சரஸ்வதி ஆகியவர்களின் நாட்டிய அரங்கேற்றம் மயிலை ரஸிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது, டைரெக்டர் சுப்ரமண்யம் இவர்களைப் பாராட்டிப் பேசினர். சினிமா சம்பந்தப்பட்டவர் கள் அநேகர் விஜயம் செய்திருந்தனர்.

சகுந்தலா பிறந்த நாள்

பிரபல சினிமா நடிகை ஸ்ரீமதி ஏ. ஆர். சகுந்தலா வழக்கம் போலவே தம் பிறந்த நாளைக் கொண்டாடினர். ஆனல் மகாத்மாவின் மறைவு நிமித் தம் இவ்வருஷம் அதிக தடபுடலின்றி கொண்டாடியது குறிப்பிடத் தக்கது. சினிமாக் கலை சம்பந்தப் பட்டவர்கள் அநேகர் வந்து ஆசி கூறினர்கள்.

புதிய படம்

"மதனமாலா" வைத் தயாரித்த ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸார் தங்களது அடுத்த படம் "குமாரி" என்று அறி வித்திருக்கின்றனர். "மதனமாலா" வில் நடித்த ஸ்ரீராம் இதிலும் பிரதம பாகத்தில் நடிப்பாராம்.

ஜம்பம் வெற்றி

வி. குமார், ராஜேஸ்வரி, வனஜா, சேதுராமன், அங்கமுத்து நடிக்கும் குஹன் பிக்சர்ஸின் "ஜம்பம்" வெளியூர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறதாம். கைகளே இல்லாத ஆங்கில மாதின் செயல்களை ஜனங்கள் புகழ்கிருர்களாம்.

பாலி டெக்னிக் படம்

பான்க்வெட்டிங் ஹாலில் காந்திஜி யின் அஸ்தியை சென்னை நகர வாசிகள் தரிசனம் செய்த காக்ஷிகளை சென்னை பாலி டெக்னிக் கழக மாண வர்கள் படமாகத் தயாரித்திருக்கிருர்க ளாம். அஸ்தி ஊர்வலக் காட்சியை யும் இவர்கள் படமாகத் தயாரித்திருக் கிருர்களாம்.

பாரடைஸ் தியேட்டர்

மௌண்ட் ரோடில் ஒரு நல்ல தியேட்டரைக் கட்டவேண்டு மென்ற எண்ணம் ஸ்ரீ. சௌந்தரராஜனுக்கு இருந்திருக்க வேண்டும். அதன் பய ஞை அவர், பாரடைஸ் தியேட்டர் என்ற ஒரு தியேட்டருக்கு அஸ்தி வாரக் கல் நாட்டு விழாவை சமீபத் தில் நடத்தி யிருக்கிருர். இதைச் செய்து வைத்தவர் கனம் மந்திரி ஸ்ரீ. சீதாராம ரெட்டியார், ஸ்ரீ. ஆர். ஆர். சர்மா, பாரடைஸ் தியேட்டர் எப்படி இருக்கும் என்று விவரித்தார். இது

மூன்று மாடிகளைக் கொண்டதாக இருக்குமாம். ஸ்ரீ. சௌந்தரராஜனும் மந்திரியாரை வரவேற்றுப் பேசுகையில், சர்க்கார் நியாயமான கௌரவத்தை சினிமாத் தொழிலுக்கு அளிக்க வேண்டுமென்றும், புதிதாகக் கொட்டகை கட்டவும், ஸ்டுடியோ நிர்மாணிக்கவும் முயற்சிப்பவருக்கு உதவ வேண்டுமென்றும் கூறினர்.

மந்திரி அஸ்திவாரக் கல்லை நாட்டிவிட்டுப் பேசுகையில், குறைந்த கட்டணம் கொடுப்போருக்கும் தியேட்டர்களில் நிறைய வசதிகளைக் கொடுக்க வேண்டுமென்றும் கூறினர். இப்புது முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தமிழ் நாடு டாக்கீஸ் முதலாளி ஸ்ரீ. சௌந்தரத்திற்கு நமது மனப் பூர்வமான வந்தனங்கள் உரித்தாகும்.

பிரேத ஊர்வலக் காட்சி

மகாத்மா காந்தியின் பிரேத ஊர்வலக் காட்சியை ஸ்ரீ. மாட்வேன் என்பவர் தயாரித்துள்ளாராம். சென்ற ஏழாந் தேதி இத் துண்டுப் படம் பம்பாயில் திரை யிடப்பட்டதாம். பம்பாய் பிரதமர் ஸ்ரீ. பி.ஜி. கேர், மந்திரி மொரார்ஜி தேசாய் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்களாம். படம் உள்ளத்தைக் கவருவதாக அமைந்திருக்கிறதாம்.

காமிராமேன் திருமணம்

ஸ்ரீ. ஆர். மாணிக்க நாயகரின் குமாரரும், மாடர்ன் தியேட்டர்ஸின் காமிராமேனுமான ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி, ஸ்ரீ. வஜ்ஜிரவேலு நாயகர் குமாரத்தியான சௌ. சரஸ்வதி அம்மாளை பிப்ரவரி 1-ந்தேதி திருவல்லிக்கேணியில் மணந்து கொண்டார். தம்பதிகளுக்கு நமது ஆசீர்வாதங்கள். இதையொட்டி சியாமளா சகோதரிகளின் சங்கீதக் கச்சேரி நடந்ததாம்.

பரத நாட்டியம்

தனுஷ்கோடி பி. டபிள்யூ இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. வெங்கிட்டராமன் அவர்களது புத்திரி சௌ. ராஜத்தின் பரத நாட்டியம் சென்ற 15-7-48 அன்று நடைபெற்றதாம். பல ஆபீஸர்களும் பொதுஜனங்களும் வந்திருந்தனராம். ஸ்ரீ. சேஷாத்திரி ஐயங்கார் சௌ. ராஜத்தின் நாட்டியத்தைப் பாராட்டிப் பேசினராம்.

வருந்துகிறோம்

"ஹிந்துஸ்தான்" ஆசிரியர் ஸ்ரீ. நாராயண ஐயங்கார், "தினசரி" உப ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணஸ்வாமி இவர்களது தாயாரான ஸ்ரீமதி குப்பச்சி அம்மாள் 30-1-48 அன்று மகாத்மா அமரர் ஆன சில மணி நேரத்திற்குள் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். ஸ்ரீமதி காந்தி பக்தை. அன்னரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உபாத்தியாயினியின் உபதேசம்

"இன்றையப் படங்களில் 'இனக்கவர்ச்சி'தான் காணப்படுகிறது. காதலுக்காகவே வாழ்க்கை நடத்துவதாகவே பெரும்பாலும் காண்பிக்கப் படுகிறது. பெண்கள் இந்த எண்ணத்தை மேற் கொள்ளக் கூடாது. குழந்தைகள் சம்பந்தப் பட்ட படங்களைப் பற்றி தாம் யோசிப்பதாகவும்" பக்கிங்ஹாம்ஷையர் உபாத்தியாயினி மிஸ். டௌன்ஸ் கூறினராம்.

ஐஸன் ஹோவருக்குத் தலைமைப் பதவி

ஜெனரல் ஐஸன் ஹோவர் அமெரிக்கச் சினிமாத் தொழிலின் தலைவராக இன்னும் இரண்டு மாதங்களில் நியமிக்கப் படுவாராம். இதற்காக அவருக்கு ஒரு லக்ஷம் பவுன் வருஷ சம்பளமாகக் கொடுக்கப் படுமாம். செலவு வகையறு வேறு கொடுக்கப்படுமாம். சுமார் ஏழு வருஷங்களுக்கு இந்த ஒப்பந்தம் நீடிக்குமாம்.

இது செய்தி

தேச கீதத்தைப்பற்றி சுப்ரமண்யம்

இந்திய தேச கீதம் பற்றி இப்பொழுது டில்லியில் சர்ச்சை நடந்து வருகிறது. இது சம்பந்தமாக தென்னிந்திய பில்ம் சேம்பர் தலைவரான ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் இந்தியப் பிரதம மந்திரி ஸ்ரீ. ஜவஹர்லால் நேருவுக்கு இம்மாதம் 14ந் தேதியன்று ஒரு தந்தியை அனுப்பியிருக்கிறார். "சர்ச்சையிலிருக்கும் இந்திய தேச கீதத்தில் 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற காந்திஜிக்குப் பிரியமான பஜனைப் பாட்டையும் ஒரு பகுதியாக ஆக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

வைரத்தின் வைராக்யம்

ஸ்ரீ. வைரம் அருணாசலம் செட்டியார மிகுந்த வைராக்கியம் கொண்டவரய்யா. 1945-ம் வருஷம் ஜூன் மாஸத்தில், அவருக்குப் புதிய ஊரான சென்னையில், புதிதாகக் கட்டப்பட்ட ஒரு தியேட்டரில், ஒரு புதிய நாடகத்தை ஆரம்பித்து, அதன் மூலம் மிகுந்த புகழையும் அடைவதென்றால் லேசான காரியமா? அதோடு நின்றாரா என்ன? சென்ற இரண்டரை வருஷ காலமாக நாள் தவறாது பல புதிய நாடகங்களை நடத்திக் காட்டியுமிருக்கிறார். இன்னமும் அவருடைய நாடகங்களில் சென்னை ரஸிகர்களுக்கு அலுப்பு ஏற்படவில்லை. அதற்குக் காரணம் அவருடைய பிரத்தியேக சாமர்த்தியந் தான் என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது?

அவருடைய கம்பெனி சென்னைக்கு வந்ததும் சில எதிர்பாராத சங்கடங்கள் ஏற்பட ஆரம்பித்தன. வேறொரு படக் கம்பெனியார் அவர் பிரபலப் படுத்திய "திருமழிசை ஆழ்வாரை"ப் படமாக்குவதில் மூழ்கிக் கொண்டார்கள். அவருடைய சில நடிக நடிகைகளை சினிமாத் தொழில் கவ்விக் கொண்டது. ஆனால் "யார் இருந்தாலும் போனாலும் நாடகம் நடந்தே தீரும்; வெற்றிக் கொடியை நாட்டாது வேறு ஊருக்குப் போக மாட்டேன்" என்று சொல்லாமல் செய்து காட்டிய ஸ்ரீ. வைரத்தின் நெஞ்சு எவ்வளவு வைரம் பாய்ந்ததாய் இருக்க வேண்டும்? நாடகங்களை நடத்தியவாறே அவர் தம் பிரபல நாடகமான குடும்ப வாழ்க்கையைப் படமாகவும் தயாரித்து வருவது நேயர்களுக்குத் தெரியும்.

சில தினங்களுக்கு முன் இந்த நாடகக் கம்பெனி இடம் மாறி ஒற்றைவாடைத் தியேட்டரில் நாடகங்களை நடத்தி வருகிறது. கம்பெனி நடிகர்கள் கோஷ்டியில் பிரபல எம். எஸ். விஜயாளும் சேர்க்கப் பட்டிருக்கிறார். முதலில் நான் நினைத்தேன். "குடும்ப வாழ்க்கை படம் முடியும் வரையில் தான் ஸ்ரீ. வைரம் சென்னையில் இருப்பார்" என்று. ஆனால் ஒற்றைவாடைத் தியேட்டரில் நாடகம் ஆரம்பமானது முதல் அதற்கு ரஸிகர்கள் காட்டி வரும் ஆதரவைப் பார்த்தால், ஸ்ரீ வைரம் தம் நாடகங்கள் அனைத்தையுமே படமாகத் தயாரித்து முடிக்கும் வரைக் கூட இவ்வாதரவு நீடிக்குமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது.

லண்டனில் காந்திஜி படம்

காந்திஜியின் ஈமக் கிரியைகளைக் காட்டும் செய்திப் படம் பிப்ரவரி மாஸம் 10-ந் தேதி முதல் லண்டனில் காட்டப்பட்டபோது, அதைப் பார்த்து விட்டுச் சென்ற லண்டன் இந்திய ஜனங்கள் (ஆண், பெண், குழந்தைகள் அனைவரும்) கண்ணீர் விட்டு அழுது கொண்டே சென்றார்களாம். இந்தியர்கள் மட்டுமன்றி லக்ஷக் கணக்கான ஆங்கிலேயர்களும் இப்படத்தைப் பார்த்து விட்டுத் துக்கத்திலாழ்ந்தனராம். இச்செய்திப் படத்தைக் காட்டிய ஒரு தியேட்டர் மானே

பிரசங்கி :—வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பு காரணமாகவே பலர் மேடைக்கு வந்திருக்கின்றனர்.

ஒரு குரல் :—உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பைப் பற்றி முதலில் சொல்லும்!

ஜர், தாம் இதற்கு முன் இதைப் போன்ற அக்ககரமான படத்தைக் காட்டியதேயில்லை என்று கூறினர். இந்த யுனிவர்ஸல் படம் இப்பொழுது சென்னையில் சில தியேட்டர்களில் காட்டப் பட்டு வருகிறது,

*　　　*　　　*

அமெரிக்கப் பத்திரிகைக்காரர் ஒருவர் காந்திஜியின் பிரேத ஊர்வலம், ஈமக்கிரியைகள் ஆகியவற்றை டெக்னிக் கலர்ப் படமாகத் தயாரித்திருக்கிருராம், இப்படம் விமானத்தின் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பப் பட்டிருக்கிறதாம்.

ராஜாபாதர் திருமணம்

பிரபல நக்ஷத்திரம் டி. ஆர். ராஜகுமாரியின் ச்கோதரரும், ஜெமினி ஸ்டுடியோவில் உதவி கேமிரா மென்னுமான ஸ்ரீ. ராஜாபாதருக்கும், பி. என். ரயில்வேயில் டிரான்ஸ்போர்ட் டேஷன் ஆபீஸராக உள்ள ஸ்ரீ. ராஜகோபால் அவர்களின் புத்ரி கமலா தேவிக்கும் இம்மாதம் 11-ந் தேதியன்று டி. ஆர். ராஜகுமாரியின் இல்லத்தில் (சென்னையில்) சிறப்பாக வைதீக முறைப்படி திருமணம் நடந்தேறியது. திருவிடை மருதூர் சப் ரிஜிஸ்திரார் ஆபீஸைச் சேர்ந்தவரும், ராஜகுமாரியின் தாய் மாமனுமான ஸ்ரீ. டி.கே. ராஜகோபாலன் இத் திருமணத்தை நடத்தி வைத்தார். சினிமா நக்ஷத்திரங்கள், பத்திரிகாசிரியர்கள், தொழில் பிரமுகர்கள் முதலிய பலரும் விஜயம் செய்து தம்பதிகளுக்குப் பரிசுகளையும் ஆசிகளையும் வழங்கிச் சென்றுர்கள். தம்பதிகளுக்கு நம் ஆசீர்வாதங்கள்.

சினிமாக் கொட்டகை ஊழியர்கள் ஊதியம்

சினிமா கொட்டகையில் வேலை செய்வோரின் மாதச் சம்பள விகிதங்களை நிர்ணயித்து மத்தியஸ்த கோர்ட் சிபார்சுகள் செய்திருக்கிறது. அகவிலை 160 பாயின்ட் என்ற அடிப்படையில் சம்பளத்தை நிர்ணயித்து, அதற்கு மேல் ஒவ்வொரு பாயின்டுக்கும் 3 அணு விலைவாசி கிராக்கி அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்பது கோர்ட்டின் சிபார்சு. ஒரு வருஷத்து லாபம் 10 சத விகிதத்துக்கு மேல் இருந்தால் ஒருமாதச் சம்பளம் போனஸாக கொடுக்கப்பட வேண்டும். 20 சத விகிதத்துக்கு மேல் இருந்தால் 2 மாத போனஸ், 30 சத விகிதத்துக்கு மேல் 3 மாத போனஸ், என்றிப்படி 10 சத விகிதத்துக்கு ஒரு மாத சம்பளம் வீதம் போனஸ்.

ஒவ்வொரு மாதமும் 5-ந் தேதிக்குள் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். தனது சம்பளத்தை இரு தவணையாக ஒருவர் பெற்றுக்கொள்ள விரும்பினுல் மேற்கூறியபடி 5-ந் தேதிக்குள் சம்பளத்தில் ஓர் சிறுதொகையையும், பிறகு 15, 20 தேதிகளுக்குள் மிகுதியுள்ள பணமும் வழங்கப்பட வேண்டும். 12 மாதங்கள் தொடர்ந்து சேவை செய்துள்ள தொழிலாளருக்கு 12 தினங்கள் காஷுவல் ரஜாவும், 12 நாள் பிரிவிலேஜ் ரஜாவும், 12 நாள்

நோய் ரஜாவும் (சம்பளத்துடன்) வழங்கப்பட வேண்டும். பிரிவிலேஜ் ரஜாவை 24 நாட்கள் வரை சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். பிராவிடன்ட் பண்ட் சம்பந்தப்பட்ட வரை ஒவ்வொரு சிப்பந்தியும் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் நிதி செலுத்துவர். இதற்கு சமமான தொகையை முதலாளிகள் வழங்குவர். ஒவ்வொரு வருஷ சேவைக்கும் சிப்பந்திகளுக்கு அரை மாதச் சம்பளம் அவருடைய சேவையைப் பாராட்டும் முறையில் வழங்கப்பட வேண்டும். குறைந்தது 3 வருட சேவையுள்ள சிப்பந்திகளுக்குத் தான் (பிராவிடன்ட் பண்ட் முறை அமலில் வரும் வரை) இப்பணம் வழங்கப் பட வேண்டும். சேவை நேரத்திற்கு அதிகமாக வேலை செய்தால் (ஓவர் டைம்) தினசரிகூலிக்கு 7/8 விகிதத்தில் அதிகப்படி சம்பளம் வழங்கப்பட வேண்டும். வாராந்திர விடுமுறைச் சட்டப்படி வாராந்திர விடுமுறை விட வேண்டும். 6 மாத சேவைக்குப் பின் சிப்பந்திகள் வேலையில் ஊர்ஜிதமாக்கப்பட வேண்டும். முதலாளிகள் விரும்பினால் பரீக்ஷை காலத்தை 6 மாதங்களுக்கு அதிகமாக மேலும் 6 மாதம் நீடிக்கச் செய்யலாம். இக்காலத்தில் ஓர் குறிப்பிட்ட சிப்பந்தியின் சேவை முதலாளிக்குத் திருப்தி அளிக்காவிடில் அச் சிப்பந்தியை முதலாளி சேவையினின்றும் விலக்கி விடலாம். ஒருவர் வேலையினின்று நீக்கப்படும்போது, ஓர் யூனியன் அதிகாரியின் முன்னிலையில் விசாரணை நடத்தப்பட்டு, அவர் மீதுள்ள குற்றம் ருசுப்பட வேண்டும். ஓர் சிப்பந்திக்கு அபராதமோ சஸ்பெண்ட் உத்திரவோ அல்லது அவர் சேவையிலிருந்து நீக்கப் பட்டோ இருந்தால் தொழிலாளர் க்ஷேமக் கமிட்டியிடம் அல்லது தொழில் கமிஷனரிடம் அவர் தமது குறையைத் தெரிவித்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

புக்கிங் கிளார்க்குகள், டிக்கெட் கலெக்டர்கள் வேரிடங்களிலும் வேலை பார்த்து வருபவர்களாக இருந்து, 3-மணி மாட்டினி காக்ஷிக்கு வேலைக்கு வர முடியாமலிருந்தால், அவர்களுடைய ஊதியம் குறைக்கப்பட்டு, இம் மாட்டினி காட்சிகளில் சேவை புரியும் சிப்பந்திகளுக்கு அப்பணம் வழங்கப்பட வேண்டும்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஸ்ரீ கே. சுப்பராயலு, ஸ்ரீ. ஆர். லோகநாதன் ஆகியோர் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவர்களுக்கு நஷ்டஈடாக முறையே ரூ. 2[illegible] ரூ. 70-10-8 வழங்கப்பட வேண்டும். ஸ்ரீ. அப்துல் காதர் என்ற மற்றொருவரை மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ள அவசியமில்லை.

அடிப்படை ஊதியம் சம்பந்தமா[illegible] செய்யப்பட்ட சிபாரிசுகள் 20-5-4[illegible] லிருந்து, பின் தேதியிட்டு அமல் நடத்தப்பட வேண்டும். இதர சிபாரிசுகள் 1-1-48லிருந்து அமல் நடத்தப்பட வேண்டும்.

இந்த சிபாரிசுகளை சர்க்கார் ஏற்றிருப்பதால் இவை ஒரு வருட காலம் வரை அமல் நடத்தப்படும்.

நீங்கள் விரும்பும்
உயர்ந்தரக ஜவுளிகள்

யாவும் குறைந்த
விலையில் எம்மிடம்
கிடைக்கும்

★

வாசுகி
வஸ்திராலயம்

22, மேல சித்திரை வீதி,
மதுரை.

எங்கண்ணே ரொம்ப.. அவசரமா போறே?
ஊரை கொளுத்த
என்ன. ஊரை கொளுத்தவா? ஐயய்யோ.....
வோணண்ணே எக்கச் சக்கம். போலீசு கீலீசு......
சொன்னேகேளண்ணே.. அதெல்லா வோணு.......
வுடப்பா நேரமாவுது..
யய்யோ.. வோணைன்றை வான்றை.. அப்புறம்......
நேரமாவுது வுடு சொல்றேன்
இன்னிக்கி ராமாயணம் ட்ராமாலே எனக்கு அநுமாரு வேசம். அதுக்கி போறேன்......
பாய்ரியே.

ஹாஸ்யம் ததும்பும் "ஜம்பம்"

குஹன் பிக்சர்ஸின் படாடோபமற்ற வெற்றி

நக்ஷத்திரப் பதவியை அடைந்த ஒருவர்கூட இல்லாமல் பெயர் தெரியாத எக்ஸ்ட்ரா நடிகர்களைக்கொண்டு ஒரு படத்தைத் தயாரிப்பதற்கு ஒருவருக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்? அப்படி எடுக்கப்பட்ட ஒரு படம் வெற்றிகரமாகவும் ஓடத் தொடங்கி விட்டால் அது ஆச்சரியப் பட வேண்டிய விஷயம்தானே? இத்தகைய படம்தான் ஜம்பம்.

ஜம்பம் ஒரு சமூகப் படம். சில படங்களில் ஒரு சாதாரண நடிகராய்த் திண்டாடிக் கொண்டிருந்த வி. குமாரஸ்வாமியின் தைரியமான முதல் முயற்சி இது. அவர் இப்படத்தின் அநேக வேலைகளை மேற்போட்டுக் கொண்டு செய்திருக்கிறார். கதை வசனம் இவரால் எழுதப்பட்டதாகும். நாட்டிய டைரெக்ஷன், பட டைரெக்ஷன், நடிப்பு, இவைகளையும் அவர் செய்திருக்கிறார். அவர் ஏற்றுக் கொண்ட காரியத்தை வெற்றிகரமாய் முடித்ததற்கு அவரைப் போலவே நாமும் சந்தோஷம் அடைகிறோம்.

ஜம்பம் படத்தின் கதை ஆரம்பம் முதல் கடைசி வரையில் ஹாஸ்யச் சுவையுடன் அமைக்கப் பட்டிருக்கிறது. சிங்காரம் என்ற வாலிபன் ஒரு சோம்பேறி. வேலை சம்பாதித்துக் கொள்ள மறுத்ததால் அண்ணனால் வீட்டை விட்டு விரட்டப்படுகிறான். வேறு ஒரு புதிய ஊருக்குச் சென்று கந்தல் துணியுடன் சுற்றி அலைகிறான். கையில்லாத ஒரு பெண் காலாலேயே எல்லா வேலையையும் செய்யும் அதிசயத்தைப் பார்க்கச் செல்லுகிறான். பிச்சைக்காரக் கோலத்தில் இருந்த அவனை கேட்டிலிருந்தவன் உள்ளே விட மறுத்துவிடுகிறான். பிறகு தன் நண்பனான வண்ணாரச் சின்னனிடம் சில துணிகளை இரவல் வாங்கிப் போட்டுக் கொண்டு போனதும் அனுமதி கிடைக்கிறது. இந்தக் காலத்தில் ஆடைகளுக்குத்தான் மதிப்பு அளிக்கிறார்கள் என்பதை உணர்ந்த சிங்காரம் இரவல் துணி மூலமே "மைனர்" ஆகிவிடுகிறான். அந்த ஊர்த் தாசி நரஹரி தன் பெண்களில் மூத்தவளான ஊமைப் பெண்ணை மைனருக்குத் திருமணம் செய்து வைக்கிறாள்.

இரவல் வியாபாரம் கடைசியில் வெளியாகிறது. இதற்கிடையில் சிங்காரம் ஒரு "புதையலை" எடுக்கிறான். அது சம்பந்தமாக போலீஸார் அவனைக் கைது செய்கின்றனர். அவ

"ஜம்பம்" படத்தில் சப் இன்ஸ்பெக்டர் வேஷத்தை திறம்பட நடித்துள்ள என். திருவேங்கடம்.

னுக்கு இரவல் கொடுத்திருந்த ஆடைகளின் சொந்தக்காரரையே அழைத்துக் கொண்டு சின்னானும் வந்து சேருகிறான். சிங்காரம் தான் செய்த குற்றங்களுக்காக வருந்தி மன்னிப்புப் பெறுகிறான். பிறகு நூற்கழகமொன்றில் சேர்ந்து தன் ஆடைகளைத் தானே நூற்றுக் கொள்ளுகிறான்.

அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணிகளை வாங்கிக் கொண்டிருந்ததால்தான் இந்தியாவில் இன்றைய தினம் துணிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்ற காந்திஜியின் கதர் கொள்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டு கதை எழுதப்பட்டிருக்கிறது. ஹாஸ்ய நிகழ்ச்சிகளும், துணுக்குகளும் படம் பூராவிலும் நிரவப்பட்டிருக்கிறது.

இரு கைகளுமில்லாத ஒரு பெண், ஊசியில் நூலைக் கோர்ப்பது முதல் சகல காரியங்களையும் தன் கால்களாலேயே செய்வது எல்லோரும் பார்க்க வேண்டிய அதிசயமாகும். குமாரஸ்வாமி பலே ஆசாமி; சாதுரியமாக நம் மந்திரிகள் சிலரைப் படத்தில் நடிக்கவும் பேசவும் செய்துவிட்டார்!

சிங்காரமாக நடிக்கும் குமார் தம் வேஷத்திற்கேற்ப நன்கு நடித்திருக்கிறார். சம்பாஷணைகளை இன்னும் சற்று நிதானமாகவும், உணர்ச்சி ததும்பும்படியும் பேச வேண்டும். சேதுராமனின் (கிட்டப்பா) நடிப்பில் அபிவிருத்தி காணப்படவில்லை. பி. ஜி. வெங்கடேசன் வண்ணானாகத் தோன்றியிருக்கிறார். பாட்டு சுமாராக இருக்கிறது, தாசி நரஹரியாக நடிக்கும் கே. எஸ். அங்கமுத்து சந்தர்ப்பம் அளித்தால் வெளுத்துக் கட்டுவார் என்று நிரூபித்துவிட்டார். சப் இன்ஸ்பெக்டராக நடிக்கும் என். திருவேங்கடம் தன் வேஷத்தைப் புரிந்து கொண்டு நன்கு நடித்திருக்கிறார். இதர நடிகர்களும் தத்தம் வேஷங்களுக் கேற்பவே நடித்திருக்கிறார்கள்.

படம் பாட்டு அம்சத்தில் திருப்தியை அளிக்கிறது. வைக்கம் சரஸ்வதி, கே. என். ராஜம் ஆகியோர் பாடியிருக்கும் பின்னணிப் பாட்டுகள் நன்றாயிருக்கின்றன.

ஒலி, ஒளிப் பதிவுகள் சுமாராயிருக்கின்றன.

முதல் முயற்சியாயினும் ஜவேரியும், குமாரஸ்வாமியும் சேர்ந்து இப்படத்தை ஸ்வாரஸ்யம் கெடாமல் தயாரித்திருக்கிறார்கள்.

கையில்லாப் பெண்ணைப் பார்ப்பதற்காகவும், மந்திரிகளே இதில் தோன்றுவதனாலும் இப்படத்திற்கு மிகுந்த ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். —**பி. ஆர். எஸ்.**

Truthful
READY MADE CLOTHES

அழகை அழகு பெறச் செய்வது
அழகான

“ட்ரூத்புல் ஆடைகளே”

தயாரிப்பவர்கள் :

ட்ரூத்புல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

குண்டூசி விமர்சனம்

"தேவதாஸி" - ஒரு பெரிய ஏமாற்றம்!

கோர முகங்களும், ஹாஸ்யமும் நிறைந்த படம்

வெகு காலமாகத் தயாரிக்கப்பட்டு, பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டு வெளி வந்திருக்கும் படங்களில் ஒன்றாகும் **தேவதாஸி**. இவ்வளவுக்கும் இப்படம் எதிர்பார்த்த மாதிரி உயர்ந்ததாய் இல்லாமல், ஒரு மூன்றாந்தரப் படமாக அமைந்திருப்பது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

கதை, மதுரை மன்னன் ருத்ர பாண்டியனைப் பற்றிய சரித்திரக் கதையாகும். ஆனால் கதையின் முடிவு புராணப் படம் போலவே முடிகிறது.

மதுரைத் தெருக்களில் ஆடிப் பாடிப் பிச்சை எடுத்து வந்த சிங்காரி என்ற அனாதைப் பெண்ணை ஷண்பக வடிவு என்ற தாஸி அழைத்துச் சென்று அவளுக்கு தேவகுஞ்சரி என்று பெயரிட்டு வளர்த்து வருகிறாள்.

தேவகுஞ்சரியின் அழகு நாளடைவில் பிரசித்தமாகிறது. போரிலிருந்து திரும்பிய இளவரசன் ருத்ர பாண்டியன் தேவகுஞ்சரியிடம் மையல் கொண்டு அவளை அடைய முயற்சிக்கிறான். ஆனால், தேவகுஞ்சரியோ இளவரசனின் நண்பனான பலவந்தனைக் காதல் கொள்கிறாள். ஷண்பக வடிவு எவ்வளவோ உபாயங்களைச் செய்தும் தேவகுஞ்சரியின் மனதை மாற்ற முடியவில்லை.

ருத்ரபாண்டியன் தேவகுஞ்சரியிடம் பலவந்தனையே தூதனுப்புகிறான். பலவந்தன் எவ்வளவோ சொல்லியும் கூட தேவகுஞ்சரி அவன்மீது கொண்ட காதலை மாற்ற மறுக்கிறாள். பிறகு இருவரும் சேர்ந்து வாழ்கின்றனர். இதனால் கோபமுற்ற இளவரசன், தேவகுஞ்சரிக்கு மயக்க மருந்தைக் கொடுத்து அரண்மனைக்கு தூக்கி வரச்செய்து, அவளை பலாத்காரம் செய்ய முயல்கிறான். இந்த விஷயம் அரசனுக்குத் தெரியவே இளவரசனை நாடுகடத்துகிறான். இளவரசன் ஒரு ஞானியை அடைந்து அவர் உபதேசப்படி ஒரு துறவியாகிறான். கடும் தவம் செய்து பல சித்திகளைப் பெறுகிறான்.

இதற்கிடையில் தேவகுஞ்சரியிடம் பலவந்தனுக்கு நாளடைவில் ஆசை குறைகிறது. முடிவில் அவள் நடத்தை மூலம் அவள்மீது சந்தேகங் கொண்டு அவளை விட்டுப் பிரிகிறான்.

ஒரு நாள் ஒரு வயோதிக அந்தணர் குருவிடம் வந்து, தேவகுஞ்சரியின் வலையிலிருந்து தன் மகனைக் காப்பாற்ற வேண்டுமென்று முறையிடுகிறார். குரு அது சாத்தியமில்லையென்று சொல்லுகிறார். ஆனால், தான் தேவகுஞ்சரியை நல்வழிப் படுத்தி விடுவதாக ருத்ர பாண்டியன் புறப்படுகிறான்.

சபதப்படியே ருத்ர பாண்டியன் தேவகுஞ்சரியை ஞான மார்க்கத்தில் திருப்பி, தன்னுடன் அழைத்துச் சென்று, ஒரு கன்னியா மாடத்தில் சேர்க்கிறான். ஆனால் ருத்ர பாண்டியன் மனதில் தேவகுஞ்சரி சஞ்சரிக்கத் தொடங்கி விடுகிறாள்.

தன் குருவிடம் தன் மனத் தடுமாற்றத்தைத் தெரிவிக்கிறான் ருத்ர பாண்டியன். குரு அவனுக்கு நல்லுபதேசங்களைச் செய்கிறார். ஆனால் ருத்ர பாண்டியன் எவ்வளவோ கடுமையாக முயற்சித்தும் முடியாமற் போகவே தவத்தில் வெறுப்புற்று தேவகுஞ்சரியை நாடுகிறான்.

ஆனால் தேவகுஞ்சரியோ ஞான மார்க்கத்தில் வெகுதூரம் முன்னேறி

விட்டதால் அவளை ஈசன் ஆட்கொண்டு விடுகிறார்.

உயர் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கதை பிரபல ஆசிரியர் அனடோல் பிரான்ஸின் 'தாய்ஸ்' கதையையும், முன்பு வெளிவந்த "சித்திரலேகா" படக் கதையையும்ஞாபகமூட்டுகிறது. காமத்தைவெல்லுவது ஒரு தாஸிக்கு சுலபமாயிருந்தபோது, ஒரு துறவிக்கு அதை வெல்லுவது சாத்தியமில்லாமற் போய் விட்டது என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, பி. எஸ். ராமய்யா கதையை அழகாக எழுதி யிருக்கிறார். ஆனால் இத் தத்துவம் படத்தில் அழகாக விளக்கப்பட வில்லை. இடைவேளைக்கு முன்பே கதை முடிந்து விடுமோ என்று எதிர்பார்க்கும்படி படக் கதை அமைந்திருக்கிறது, இடைவேளைக்குப் பின் ஒரு புதுக் கதை ஆரம்பமாவது போன்ற எண்ணமே ஏற்படுகிறது, படக் கதை ஒரே அச்சின் மீது சுழலாததால் கதையின் கருத்து குழப்பமாக முடிந்திருக்கிறது.

இப் படத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் நடிக நடிகைகளை நினைத்தால் ஒரு குரல் அழலாமா என்றே தோன்றுகிறது. கண்ணருவியான இவர்களது தோற்றமும், காதருவியான பேச்சுகளுமே முதலாவதாய் படத்தைப் பாழ் படுத்தியிருக்கின்றன.

கதையில் தேவகுஞ்சரி ஒரு அதி அழகி, ஊர் தனவந்தர்கள் பலர் அவளுடைய தரிசனத்திற்காகவும் பேச்சுக்காகவுமே தங்கள சொத்து சுதந்திரத்தை யெல்லாம் அர்ப்பணம் செய்து விட்டுக் காத்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய ஒரு தாஸி எவ்வளவு அழகாக இருக்கவேண்டும்? ஆனால் இந்தப் பாத்திரத்திற்கு வசீகரமற்ற ஒரு எலும்புக் கூட்டைப் போட்டிருப்பது கேலிக்கூத்தாக இருக்கிறது. இப் பாத்திரத்தை நடித்திருக்கும் லீலா கூடிய வரையில் நன்கு நடித்திருக்கிறார்.

இராஜகுமாரனாக நடிக்கும் கண்ணனுக்கு முகத் தோற்றம் அழகாயில்லாததோடு நடிப்பு, பேச்சு எல்லாமே நகைப்பிற் கிடமாயிருக்கிறது. துறவியாக மாறியபின் மட்டும் இவரது நடிப்பும், பேச்சும் ஓளரவு சகித்துக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

பலவந்தனாக நடிக்கும் டி. வி. எஸ். மணியின் சம்பாஷணைகள் சில இடங்களில் ஊளையிடுவதுபோல் பதிவாகியிருக்கிறது. இவரது நடிப்பு, பேச்சு தோற்றம் இவைகளும் வெறுப்பையே உண்டு பண்ணுகின்றன.

குருவாக நடிக்கும் ஆர். பாலசுப்ரமண்யம் தம் பாகத்தைக் கச்சிதமாய் நடித்திருக்கிறார்; பேச்சும் சுத்தமாக இருக்கிறது.

சண்பகவடிவாக நடிக்கும் கே. எஸ். அங்கமுத்துவின் நடிப்பு பரவாயில்லை. டி. எஸ். துரைராஜ் "முருகையா" தியானம் செய்வது ஜனங்களுக்குசிரிப்பை உண்டு பண்ணுகிறது.

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் இவர்களது பாகங்கள் கதைக்கு அவசிய மில்லை என்பதும், பிறகு சேர்க்கப் பட்டிருக்கிறதென்பதும் துண்டாகத் தெரிகிறது. ஆனால் கிருஷ்ணன், மதுரம், துரைராஜ் இவர்களுடைய ஹாஸ்ய பாகங்கள்தான் படத்திற்கு ஜீவனளிக்கின்றன.

என். எஸ். கே. ஒரு தேர்ந்த வித்வானைப் போல ஸ்வர விஸ்தாரங்களுடன்சங்கீதக் கச்சேரி செய்கிறார். மதுரமோ தம் ஸ்தூலசரீரத்துடன் பரத நாட்டியம் ஆடுகிறார்!

படத்தில் பாட்டுகள் நன்றாயிருக்கின்றன. இவைகளை சுந்தரி தம்பி பாடியிருப்பதாகத் தெரிகிறது. பாட்டுகளுக்காகவும், ஹாஸ்யத்திற்காகவும், படத்தின் இதர கண்ணருவிகளை யெல்லாம் ரஸிகர்கள் சகித்துக் கொள்ளத் தயாரென்றால் இப் படத்தைத் தாராளமாய் பார்க்கலாம். சுகுமார் சுந்திரம், டைரெக்டர் எம். எல். டாண்டன் இவர்களது மூன்று வருஷ முயற்சி இந்த விதகோர முடிவில் விளைந்திருப்பது எனக்கு ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளிக்கிறது.

—பி. ஆர். எஸ்.

புஸ்தக விமர்சனம்

அமுத கீதம்

ஒன்பது அருமையான கற்பனைச் சித்திரங்கள் இத்தொகுதியில் இருக்கின்றன. இளம் எழுத்தாளர் ஸ்ரீ. சாம்ராஜ் எடுத்த எடுப்பிலேயே கருத்து மிக்க இனிய எளிய சொற்களைக் கொண்டு கதை புனைந்துள்ளார். ஒவ்வொரு கதையும் ஒரு விதமாக இருக்கிறது. கதையின் ஆரம்பத்தைப் பார்க்கும் போதே அதைப் பூராவும் படிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறது. குழந்தையின் பசியைப் போக்க ஒரு பிடி அரிசி திருடி சிறை தண்டனை அடைந்த "ஏழையின் கதறல்", கண் இழந்து களையிழந்த காதலன், காதலி சுகமாக இருப்பதற்காகத் தன் காதலைத் தியாகம் செய்யும் "அமுத கீதம்" இரண்டு கதைகளையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ஒரு ஏழை தன் குழந்தைகளின் க்ஷேமத்திற்காக எப்படி நடந்து கொள்கிருள் என்பது "ஏழையின் கதறலி"ல் நன்ருக வெளிப்படுகிறது. காதல் எத்தன்மை வாய்ந்தது என்பதற்கு "அமுதகீதம்" ஒரு உதாரணம்.

"ஸ்ரீ. சாம்ராஜ் நடையிலே ஒளியும் அழகும் இருக்கின்றன......உயர்ந்த கருத்துக்களைக் கதையிலேயே வைத்து மறைத்திருப்பதுடன், அவை மனதிலே பதியும் வண்ணம் கதைப் போக்கை அழகாக ஜோடித்துக் கொண்டு போகிருர்......ஸ்ரீ. சாம்ராஜ் வெகு சீக்கிரம் முதல்தர எழுத்தாளராக வருவார் என்பதற்கு 'அமுதகீதம்' அத்தாட்சியாகும்" என்று நாமக்கல் கவிஞர் இப் புத்தகத்தின் முன்னுரையில் கூறியிருப்பதை நாமும் ஒப்புக் கொள்கிரோம். அழகிய ஜாக்கெட்டுடன் கூடிய இப் புத்தகத்தின் விலை ரூ. 1-0-0 தான். தமிழ்ப்பண்ணை (தியாகராயநகர், சென்னை) இதன் விநியோக உரிமையாளர்கள்.

சுதந்திர ஒளி

இளம் எழுத்தாளர்களை முன்னுக்கு கொண்டு வர வேண்டும் என்ற கருத்துடன் இந்த மாஸப் பத்திரிகை வெளிவந்திருக்கிறது. பல இளம் எழுத்தாளர் எழுத்தோவியத்துடன், ஹாஸ்ய குரங்கின் பதில், சினிமாச் செய்திகள், அழகிய அட்டைப் படம் — எல்லாம் ரஸிகர்கள் ஆதரவைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. தனிப்பிரதி விலை அணா 4. சுதந்திர ஒளி—15, ஹனுமந்தராயன் கோவில் தெரு, சென்னை 3.—இதன் பிறந்த இடம்.

கதை மலர்

பத்திரிகைத் தொழிலில் அதிக அநுபவம் வாய்ந்தவர் "ரூலி" (ஸ்ரீ. எம் ஜே. ராமலிங்கம்). அவருடைய எழுத்துக்கள் ஜனங்களைச் சிரிக்க வைத்தும், வருந்தச் செய்தும், ஆத்திர மூட்டியும் இருக்கின்றன. "ரூலி" எழுத்தாளர் மட்டுமல்ல; தீவிர தேசப் பற்றுமுள்ளவர். தேசத்தின் விடுதலைப் போரில் அவர் நேரிடையாகவும் மறைமுகமாகவும் தொண்டு செய்து சிறை புகுந்திருக்கிருர். தம் எழுத்தையும் தேசசேவையையும்தம்வாழ்க்கையின் முக்ய லக்ஷியமாகக் கருதுபவர். தேச சுதந்திரத்திற்காக உழைத்த அவர் தம் சுதந்திரத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பாரா? தேசம் சுதந்திரம் அடைந்ததும் அவரும் சுதந்திர புருஷராக மாறி சொந்தத்திலேயே "கதை மலரை"யும் வெளிக் கொண்டு வந்திருக்கிருர். படிக்க சலிக்காத விஷயங்கள்நிறைந்துள்ள இக் "கதை மலரி"ல் கவி தாகூரின் கதை கவி பாரதியார் மொழி பெயர்ப்புடன் வந்திருக்கிறது. மற்றும் மாப்பஸான், ஆண்டன் செகாவ் கதைகளும், "ரூலி"யின் ஹாஸ்யக் கதையும் இருக்கின்றன. "கதை மலரு"க்கு

பொதுஜன ஆதரவு அமோஹமாக இருக்கும் என்பதில் எனக்குக் சிறிதும் சந்தேகம் இல்லை. தனிப் பிரதி விலை எட்டு அணா. விலாஸம்:—"கதை மலர்" மாத சஞ்சிகை, 94. அரண்மனைக்காரத் தெருவு. ஜி. டி. சென்னை.

ரம்பா

புதிதாகத் தோன்றியிருக்கும் ஒரு சினிமா மாதப் பத்திரிகையின் அழகான பெயர் இது. நிறைய சினிமா விஷயங்கள், சினிமா விமர்சனங்கள், தியேட்டர்களைப் பற்றிய விவரங்கள், இவை இருப்பதுடன், சிறுகதைகள் சிலவும் இடம் பெற்றிருக்கின்றன. மூவர்ண அட்டை மிக கவர்ச்சிகரமாயுள்ளது. இதன் விலை எட்டணா. ஆசிரியர்: ஆர். ரங்கராஜன். கிடைக்குமிடம்: கேசவ விலாஸ், கல்விவாறு தெரு, மயிலாப்பூர், சென்னை.

தேவி நாடக சபா

தேவி நாடக சபா என்ற புதிய கம்பெனியார் சென்ற சில மாதங்களாக கும்பகோணத்தில் நாடகங்களை வெற்றிகரமாய் நடத்தி வருகின்றனர். சொந்தக்காரர்களான ஸ்ரீமான்கள் கே. என். ரத்தினம், வைத்தியநாதன் இவர்களது பெருமுயற்சியின் காரணமாக இக்கம்பெனி நாளுக்கு நாள் அதிக பொதுஜன ஆதரவைப்பெற்று வருகிறது. இப்பொழுது பாவலர் பாலசுந்தரத்தின் "பராசக்தி" என்ற சமூக நாடகத்தை நடத்தி வருகிறார்கள். ரங்கூனில் எதிரி படையெடுத்த சம்பவங்களை சூழ்நிலையாகக் கொண்டு ஆரம்பமாகும் இந்த நாடகத்தில், ஒரு பெண் தனியே வாழ்க்கை நடத்தவேண்டி ஏற்பட்டால் என்னென்ன கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கவேண்டியிருக்கிறது என்பதை விளக்குகிறது. இதில் பங்கெடுத்துக் கொண்ட நடிகர்கள் அனைவருமே நன்கு நடித்தனர். சென்ற மாஸம் 22-ந் தேதியன்று அ. இ. சோஷலிஸ்ட் கட்சியின் காரியதரிசியான ஸ்ரீமான்கள். கே. பி. மேனன், "ஜனதா" ஆசிரியர் ராதாகிருஷ்ணன், "குண்டூசி" ஆசிரியர் பி. ஆர். எஸ். கோபால் ஆகியோர் இந்த நாடகத்திற்கு விஜயம் செய்திருந்தனர். இவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ. ரத்னம் மாலை சூட்டி கௌரவித்தார். மேனன் நாடகத்தைப் பாராட்டி ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் பேசினார். ராதாகிருஷ்ணன் அவற்றை தமிழில் மொழி பெயர்த்துக் கூறினார்.

P. V. RAJAN & CO

MANUFACTURERS OF

MADRAS SNUFF

R. S. SUGANTHA MOOKKUTHOOL

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

పి. వి. రాజన్ మదరాసు నశ్యము

ARKONAM & MADRAS

Telegrams: "NASYAM"

பிரம்ம லோகம்

இது நிஜமா!

தமிழ் நாடு டாக்கிஸிற்காக காமிரா நிபுணர் ஸ்ரீ. கிருஷ்ண கோபாலும், சங்கீத டைரெக்டரும் நடிகருமான ஸ்ரீ. பாலசந்தரும் சேர்ந்து தயாரித்த "இது நிஜமா!" என்ற படத்தை, பிரத்தியேக அழைப்பின் பேரில் வந்திருந்தவர்களுக்கு பிரபாத் டாக்கிஸில் திரையிட்டுக் காண்பித்தார் ஸ்ரீ. சௌந்தரராஜன். நூதனமான கற்பனைக் கதை இது. கோபால், மாது என்பவர்கள் ஒரே சாயல் உடையவர்கள். மாது லண்டனில் படித்துக் கொண்டிருக்கிறான். கோபாலோ சென்னையிலே, சங்கீதக் கருவிகளை பழுது பார்க்கும் கடை ஒன்றை வைத்திருக்கிறான். அடிக்கடி அங்கே வரும் நளினி கோபால் பேரில் காதல் கொள்கிறாள். லண்டனிலே நிர்மலா என்ற பெண் மாதுவின் பேரில் காதல் கொள்கிறாள். நிர்மலாவைத் தான் அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஷண்முகம் மாதுவைக் கொன்று விடுகிறான். நிர்மலா இதை அறியாது மாதுவை நாடி சென்னையை அடைகிறாள். ஷண்முகமும் பின் தொடருகிறான். இரட்டைப் பிறப்பு ஆனதால், மாதுவின் ஆவி இந்தியாவிற்கு வந்து கோபால் கண்ணிற்குமட்டுமே தெரிகிறது; பேசுகிறது. சில வேளைகளில் கோபால் உடலில் மாதுவின் ஆவி புகுந்து கொள்ளும். இதன் விளைவாக பல அனர்த்தங்கள் விளைகின்றன. இப்படியாகச் செல்கிறது கதை. பாலசந்தர் இரட்டை வேஷங்களில் தோன்றி தமது பாகத்தை திருப்திகரமாக நடித்திருக்கிறார். அசட்டு டாக்டராக வரும் ஸ்ரீ. சீதாராமனிடம் சிறந்த குண விசேஷ நடிப்பைக் காண்கிறோம். ஷண்முகமாக வருபவர் பார்வைக்கே "விலனாக" இருக்கிறார். நளினியாக வருகிறார் சரோஜினி. சங்கீத அம்சத்திலே புது முறைகளைக் காண்கிறோம். விறுவிறுப்பான கதைப் போக்கையும் சம்பவங்களையும் கொண்ட "இது நிஜமா!" ஒரு புது முயற்சி. நல்ல முறையில் தயாரிக்கப் பட்டிருக்கும் இப்படம் விரைவில் திரையிடப் படுமாம்.

சந்திரலேகா

ஜெமினி ஸ்டுடியோவில் தயாராகும் "சந்திரலேகா" ஏப்ரல் 9-ந் தேதி திரையிடப்படும் எனத் தெரிகிறது. பிரம்மாண்டமான செட்டிங்குகளும், சர்க்கஸ் காக்ஷிகளும், நடனக் காக்ஷிகளும் படத்தின் விசேஷ அம்சங்களாகும். எம். கே. ராதா, ரஞ்சன், ராஜகுமாரி, சுந்தரிபாய், கிருஷ்ணன்—மதுரம் முதலியவர்கள் திறம்பட நடித்திருக்கிறார்களாம். ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனின் கவனமிக்க டைரெக்ஷனில் இரவு பகலாய் படம் வளர்ந்து வருகிறது.

ரத்ன குமார்

பி. யு. சின்னப்பா, பானுமதி, இவர்களை பிரதம பாகத்தில் கொண்ட முருகன் டாக்கீஸ் "ரத்ன குமார்" அதி மும்முரமாகத் தயாரிக்கப் படுகின்றது. டி. பாலசுப்ரமண்யம், எம். கே. மீனலோசனி, கிருஷ்ணன், மதுரம் ஆகியவர்களுடன் கே. பி. கேசவனும் நடிக்கிறாராம்.

நல்ல தம்பி.

எனெஸ்கே பிலிம்ஸும் உமா பிக்சர்ஸும் தயாரிக்கும் "நல்ல தம்பி" நியூடோனில் வளர்ந்து வருகிறது. ஸி. என். அண்ணாத்துரை கதை வசனம் எழுதியிருக்கிறார். என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், சகஸ்ரநாமம், பானுமதி, புளிமூட்டை ராமசாமி, ஆழ்வார் குப்புசாமி, ஸி. எஸ். பாண்டியன் முதலியவர்கள் நடிக்கிறார்கள். கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ட் செய்து வருகிறார்கள்.

அபிமன்யு

ஜூபிடர் பிக்சர்ஸின் "அபிமன்யு" சென்ட்ரல் ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. குமரேசன், ஜீவரத்தினம், நரசிம்ம பாரதி, டி. பாலசுப்ரமண்யம், சுப்பையா, புளிமூட்டை ராமசாமி ஆகியவர்கள் நடிக்கும் இப்படத்தை ஸ்ரீ. எம் சோமசுந்தரமும் காசிலிங்கமும் டைரெக்ட் செய்து வருகிறார்கள். மார்ச் ஏப்ரல் மாதங்களில் திரைக்கு வரலாம்.

சுதர்சன்

சின்னப்பா, கண்ணாம்பா மங்களம் தவிர டி. ஆர். மஹாலிங்கமும் "சுதர்சனி"ல் நடிக்கக்கூடும் என ஒரு செய்தி கூறுகிறது.

பில்ஹணன்

டி. கே. எஸ். சகோதரர்களும், ஷண்முகா பிலிம்ஸாரும் தயாரித்த "பில்ஹணன்" திரையில் தோன்ற வேண்டிய நாளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. டி. கே. ஷண்முகம், பகவதி, திரௌபதி, சிவதாணு முதலியவர்கள் நடித்திருக்கிறார்கள்.

போஜன்

ஸ்ரீ. டி. ஆர். சுந்தரத்தின் பார்வையிலும், எல். எஸ். ராமசந்திரன் டைரெக்ஷனிலும் தயாராகிக் கொண்டிருக்கும் "போஜனி"ல் பி. எஸ். கோவிந்தன், வரலக்ஷ்மி, ஆர். பாலசுப்ரமண்யம், காளி என். ரத்தினம், ராஜகாந்தம் முதலியவர்கள் தோன்றுகிறார்களாம்.

குண்டூசி டைரி

ஜனவரி 1948

134243

தேதி

1 புதிய தமாஷாவரி விதிகள் அமுலுக்கு வந்தது. தியேட்டர்களில் புது விகிதப் படி டிக்கெட்டுகள் விற்கப்படுகின்றன.

2 பரணி பிக்சர்ஸின் "ரத்ன மாலா" ஆந்திர தேசத்தில் திரையிடப்பட்டது.

12 "விந்தியா ராணி" தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காக்ஷி கேஸினோவில் நடைபெற்றது.

13 சென்னை கெயிட்டியில் துளசி-ஜலந்தர் திரையிடப் பட்டது.

14 குஹன் பிக்சர்ஸின் "ஜம்பம்" தமிழ்ப் படத்தின் வர்த்தகக் காக்ஷி கேஸினோவில் நடைபெற்றது.

காந்திஜி பக்த சபையின் 28 வது வருஷ விழா கனம் ஸ்ரீ. ஜே. சிவஷண்முகம் பிள்ளை தலைமையில் ஆரம்பமாயிற்று. பி. ஏ. பெரியநாயகியின் கச்சேரியும் யோக மங்களத்தின் நாட்டியக் கச்சேரியும் நடைபெற்றன.

கோவை ஷண்முகா தியேட்டரில் "உயிரோவியம்" நாடகம் ஆரம்பம்.

22 தமிழ் நாடு டாக்கீஸ் விநியோகிக்கும் "இது நிஜமா!" தமிழ்ப் படத்தின் பிரத்யேகக் காக்ஷியொன்று தொழிலில் உள்ள நண்பர்களுக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் பிரபாத் டாக்கீஸில் நடைபெற்றது.

23 மயிலை ரஸிக ரஞ்சனி சபாவில் டைரெக்டர் கே. சுப்ரமண்யம் தலைமையில் குமாரி சரஸ்வதியும் குமாரி சரோஜாவும் நடன அரங்கேற்றம் செய்தனர்.

25 தமிழ் நாடு டாக்கீஸ் ஸ்ரீ. சௌந்தரராஜனின் "பாரடைஸ் தியேட்டரி"ன் அஸ்திவாரக் கல்லை கனம் சீதாராம ரெட்டியார் நாட்டினர்.

30 நமது அரும் பெரும் தலைவர் மகாத்மா காந்தி அமரத்வம் அடைந்தார்.

Printed by P. Arunachalam at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 246, Thambu Chetty Street, Madras 1.



பில்ஹணன்

காதல் சித்திரம்

டி.கே.எஸ் & பிரதர்ஸ் &
சேலம் ஷண்முகா பிலிம்ஸ்.

... தயாரிப்பு ...

T.K.ஷண்முகம் • T.K.பகவதி • M.S.திரௌபதி

...மற்றும் M.S.B.S. சபா நடிகர்கள் நடித்தது......

G.H.RAO

டைரக்ஷன்: K.V.சீனிவாசன் ◊ ஸ்டுடியோ: சென்ட்ரல்

— விநியோகஸ்தர்கள் —

திரிச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் :— சங்கர் பிக்சர்ஸ், ஸ்ரீரங்கம்.
மலபார், இலங்கை, பர்மா :— டி. கே எஸ். & பிரதர்ஸ், கோயமுத்தூர்.
சேலம், மைசூர், எம். எப். எஸ்., பங்களூர் :—சேலம் ஷண்முகா பிலிம்ஸ், குகை, சேலம்.
மதருஸ், செங்கற்பட்டு, வட ஆர்காடு, தென் ஆர்காடு, கோயமுத்தூர், நீலகிரி, ஆந்திரா, வட் இந்தியா :— ஜெயா பிலிம்ஸ், செவ்வாய்பேட்டை, சேலம்.
மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் :— ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி.

GUNDOOSI
Regd. No. M. 4924
HAIRODINE
வசீகர வதனம்
வனப்பு
மிக்க கூந்தல்
ஹேரோடின்
ஜீவ சக்தி
வாய்ந்த கூந்தல்
தைலம்
CARNATIC CHEMICAL WORKS MADRAS
பிராஞ்ச: பெஸ்ராப்ஜி மேன்ஷன்ஸ் (முதல்மாடி), ஸர்.பி.எம். ரோடு, பம்பாய்,
சென்னை ஏஜண்டுகள: & கோ, 50 பந்தர் தெரு சென்னை
மதுரை ஏஜண்டு: ஜெனரல் கமர்ஷியல் ஏஜன்ஸி, கான்பாளையம் தெரு, மதுரை
பங்களூர் ஏஜண்டுகள்: கே. ஸ்ரீனிவாச ராவ், 57 இப்ராஹிம் சாகிப் தெரு
பங்களூர் (தண்டு).